[illegible]

[illegible]

Nov 1934


3L

ணu2N, N27SN

N34·8·4

186945

479

REGD. No. M. 2302.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR
25 APR 1935
MADRAS.

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு அ. § பலவான்குடி—பவ—கார்த்திகை § திங்கள் ச.

எண் உள்ளுறை. பக்கம்.

| எண் | உள்ளுறை | பக்கம் |
|---|---|---|
| க. | சிவநேசனுக்கு வாழ்த்து ... | 73 |
| உ. | விடுகவி வினவிடை ... | 74 |
| ங. | நகைச்சுவையும் புலவர்களும் ... | 77 |
| ச. | சிவம் தேவதாருவனத்தில் திருவாணியாய்ச் சென்றதற்கு நியாயம் ... | 84 |
| ரு. | குடும்பமே பெண்ணுலகம் ... | 85 |
| சு. | ஆராய்ச்சி ... | 86 |
| எ. | திரிபுரதகனம் ... | 88 |
| அ. | அடியார்பூசையே அரன்பூசை ... | 91 |
| கூ. | சிறுத்தொண்டர் சரிதை ... | 94 |
| கo. | திருக்கார்த்திகை தீபம் ... | 97 |
| கக. | சீவகாருண்யம் ... | 98 |
| கஉ. | ஓர் விடுகவி வினா ... | 100 |
| கங. | தேவிகாலோத்தர ஆகமம் | (25—32) |

ஆசிரியர் ராம. சு. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

## செய்தித்திரட்டு.

உள்ளூர்:—நகரச் சிவாலயத்திலிருந்து ஐப்பசி ௩௰ சோமசேகர சுவாமி, தேனாற்றுக்கு எழுந்தருளி தீர்த்தங் கொடுத்தருளினர். ஐப்பசி மாதத்தில் மழைபெய்து ஏரிகுளங்களுக்கு தண்ணீர்வந்துள்ளது.

குன்றக்குடி:—ஐந்துகோயில் தேவத்தானப் போர்ட்டில் திருவாளர்களான, காரைக்குடி மெ. செ. ச. சிதம்பரம்செட்டியார், சி. மு. அரு. நா. நாராயணன்செட்டியார், மரு. சு. இரத்னவேலு செட்டியார் ஆகிய மூவரும் அங்கத்தினர்களாக இராமநாதபுரம் ஜில்லாக்கோர்ட்டாரால் நியமனம் பெற்றுள்ளார்கள்.

கந்தசஷ்டி:—ஆறுமாமுகத்தண்ணலார்க்கு, ஐப்பசிஉஉ திருவிழாத் தொடங்கிஉஎ கந்தசஷ்டியன்று சூரசம்மாரமும், உஅ திருக்கல்யாணமும் திருப்பரங்குன்றம், திருவாலவாய், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றக்குடி, திருச்சிக்கல், திருத்தென்குடித்திட்டை, திருப்புள்ளிருக்குவேளூர் ஆகிய திருத்தலங்களிலும் கீழச்சிவல்பட்டி, தேவகோட்டை முதலான நகரச் சிவாலயங்களிலும் சிறப்புமாக நடைபெற்றன.

திருச்சிக்கலில், சுவர்ணவாகனங்களில்சுவாமிஎழுந்தருளலும், சங்கீதக் கச்சேரிகளும் வெகுசம்பிரமமாக தருமகருத்தர், கரு. முத்து. அழ. அருணாசலம் செட்டியாரால் நடத்தப்பெற்றன. தனவணிக நகரத்தார்கள், பல ஊர்களிலிருந்து வந்துகுழுமினர். பிறஅன்பர்களும் பெருந்திரளாக வந்து தரிசித்தின்புற்றனர். அனைவர்க்கும் தருமகருத்தர் வேண்டும்வசதிகள் செய்துகொடுத்தனர்.

வயிரவன்கோயில்:—ஒன்பது நகரக்கோயில்களுள் ஒன்றாக விளங்கும் இத்திருக் கோயிலில், வழக்கம்போல் சம்பாசஷ்டி உத்ஸவம்தொடங்கி உகூ சம்பார சூரசம்மாரமும் உஎ தீர்த்தவாரியும் சிறப்பாக நடைபெறும்.

விநாயகசஷ்டி:—பிள்ளையார்நோன்பு விரதமுடித்து வரம்பெறுதற்குரிய தினம், இம்மதி, உகூயாரி உஎயாரி சஷ்டி, உகூதான்.

காரைக்குடி:—திருவாளர், மெ. செ. மெ. மெ. மெய்யப்பசெட்டியார் நகரபரிபாலன சபைத்தலைவராக 12—11—34ல் தேர்ச்சியுற்றார்கள். அன்பர்பலர் தங்கள் தங்களின் மகிழ்ச்சிக்கறிகுறியாக மலர்மாலைகள் கொடுவந்தணிந்து சிறப்புச் செய்தனர். புதிய நியமனத் தலைவரால் குடிதண்ணீர் வசதியுண்டாகலாமென்று நகரவாசிகள் கருதுகின்றார்கள்.

ஸ்கந்தவிரதம்:—திருப்புத்தூர்க்கு அணித்தான தம்பிபட்டியில் கவிபாலசரஸ்வதி, திரு. ந. வேற்சாமிநாத பிள்ளை, ஐப்பசி உஉ கும்பவிம்பஸ்தாபன அக்கினிகாரியங்களுடன் ரக்ஷாபந்தனம்செய்து விரதமிருந்து ஸ்கந்தபூசனைபுரிந்து உஎ ஸ்கந்தசஷ்டியன்று விரதபூர்த்தியும் உஅ மகேசுவரபூசையும் செய்தனர்.

தீவான் பகதூர்சந்நது:—திருச்சிராப்பள்ளி டவுன்ஹாலில் ஜில்லா கலெக்டர், தர்ப்பார்நடத்தி கானாடுகாத்தான் திருவாளர், சா. ராம. சித. சு. சுபாரத்னம் செட்டியாரவர்கட்கு "திவான்பகதூர்" சந்நதை, வைசியராயின் சார்பாக வழங்கிப்பாராட்டினர்.

சட்டசபைத் தேர்தல்:—சென்னை மாகாண வர்த்தகத் தொகுதிக்கு அங்கத்தினராக, திரு. சாமி வெங்கடாஜலம் செட்டியார் தேர்ச்சியுற்றனர்.

25 APR 1935
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

| ஆண்டு ௩ | பவ—கார்த்திகை: 1934—நவம்பர் | திங்கள் ௬. |
|---|---|---|

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ளடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ண முன்னின்றே.

## "சிவநேசனுக்கு வாழ்த்து."

(திருநாவலூர், போர்டு ஆண்பாடசாலைத் தலைமையாசிரியர்,
திரு. எஸ். சந்தான கோபால ஐயரவர்கள்.)

சீதமதி கொன்றையர வணிந்த வேணிச்
சிவனருளே முத்திநிலை சேர்க்கவல்ல
சாதகமென் றடிக்கடிமெய் யன்பர்க் கெல்லாஞ்
சாற்றலுறுஞ் 'சிவநேச' தக்கோர்போற்ற
நீதமுறு மொழிற்பலவான் குடியிற் றோன்றி
நெடுங்கடல்சூழ் நீணிலத்தி னெடிதுகாலம்
மாதமுறை தவறாமல் வருக! வாழ்க!
வாழ்க! நினை வளர்த்திடுமா வணிகரேறே.

(காஞ்சிபுரம், திரு. வை. ச. இராமலிங்க-முதலியாரவர்கள்.)

அத்திமு கனாரன் சத்திய ருளினை
வித்தனை வந்தனென் றுந்திபற
இன்னிகழ்ச் சிவநேச னுந்திபற 1.

செந்தமி ழோங்கவுந் தேசஞ்செ ழிக்கவும்
வந்துதி றந்தானென் றுந்திபற
வளர்சிவ நேசனென் றுந்திபற 2.

சீர்பாண்டி நாட்டினிற் றிகழ்பல வான்குடி
சேர்சிவ நேசனென் றுந்திபற
இராம சாமியா னுந்திபற

தெய்வ முளதெனுஞ் சித்தமுண் டாகிநற்
சைவம் வளர்த்ததென் றுந்திபற
தகுஞ்சிவ நேசனா லுந்திபற 4.

புறச்ச மயநெறி போக்கியு லகினில்
நிறைச்சைவ மாக்கிய துந்திபற
நீள்சிவ நேசனென் றுந்திபற 5.

அவநெறி சேராம லானந்த முற்றிட
சிவநெறி காட்டிய துந்திபற
சீவர்க ளுக்கெல்லா முந்திபற 6.

மாதமு தற்சோம வாரந்த னில்வெளிப்
போதரு மன்பர்பா லுந்திபற
புகழ்சிவ நேசன்றா னுந்திபற 7.

ஆன்றோர் முதுமொழி யறிஞர்க விநயஞ்
சான்றோர் கட்டுரைக ளுந்திபற
தாங்கிவரு மிளிர்ந் துந்திபற 8.

திருமுறை யாகமஞ் சித்தாந்த சாத்திரம்
வருமுறை வெளியாமென் றுந்திபற
வளர்கல்வி யோங்குமா றுந்திபற 9.

ஆண்டகை யருள்போற்றி அன்புடன் வாசிக்க
வேண்டும்நீ விரெல்லா முந்திபற
வேண்டுகோ ளீதாமென் றுந்திபற 10.

வாழ்கபூ தியக்கஞ் சைவம்பஞ் சாக்கரம்
வாழ்கபூ வான்பொழிந் துந்திபற
வாழ்கசிவ நேச னுந்திபற 11.

## விடுகவி வினா, விடை.

### பிரசோற்பத்தி பங்குனி ௨௨ வந்துள்ள வினா.

1. ஆறெழுத்தா லமைந்தவோ ரூரின் பேராம்
அடிமுடியா மிரண்டெழுத்தை யாழ்ந்து நோக்கில்
அவனியுளோ ரளவுசெயுங் கருவிப் பேராம்
அழகுறுநீள் கடையெழுத்தா மிரண்டுமட்டில்
வீறுடைய மருதநிலத் தூரின் பேராம்
விந்தையுடன் கடையெழுத்தை யிரண்டும் நீக்கில்
விளங்குமொரு தைரியவான் பேரு மாகும்
விருப்பமுட னொன்றிரண்டா மெழுத்தைத் தள்ளிக்
கூறுகின்ற வைந்தாறு மெழுத்தி ரண்டுங்
குணமுடனே யகற்றி னாகாய மாகும்
…முத லிரண்டுடன் நாலா மெழுத்தைக்

186945



கூட்டிற்பிர யோச னமாம் பேருமாகும்
தேறுமூன் றைந்தெனு மீரட்ச ரத்தைச்
சேர்க்கி னதுவெற்றி யாம்விவர மாகச்
செந்தமி ழின்றுறை யுணருங் கலைவலீர்காள்
சிவநேசன் பால் விடையைச் செப்புவீரே.

### "சிவநேசன் நீடுவாழ்க"
### என்னும் மூன்றெழுத்தக்ஷரங் கொண்ட
### நடுவெழுத் தலங்கார விடுகவி வினா.

2 சீரேறு மலைகடல்சூழ் புவியின் பேரும்
செங்கருடன் மிசையூர்வோன் தாயின் பேரும்
செகத்திருளை யறவோட்டுஞ் சுடரின் பேரும்
சிவன்பேரும் வதுவையி லாச்சிறுமி பேரும்
பாரேறு நீதியறு செய்கைப் பேரும்
பரத கண்டத்தி னொரு பாடைப்பேரும்
பாம்பணியுஞ் சடாமகுடத் திறைவன் மேனிப்
பாதியிடங் கொண்டொளிருந் தேவி பேரும்
ஏரேறு மணிதரடை சிறுமைப் பேரும்
இன்பமொழி பயிலுமொரு பறவைப் பேரும்
இயைந்திடு மிச்சொற்கள் மூன்றெழுத் தாலாக்கி
இடைநடுவில் வருகின்ற வட்ச ரத்தால்
நீரேறு பல்வளமும் பெருகுஞ் செல்வர்
நிலவுபல வான்குடியிற் சிவநே சன்றான்
நீடுவாழ்ந் திடுகவருங் கலைவ லீர்நம்
நேசன்பா லிதன் விடையை நிகழ்த்துவீரே.

திரு. வை. ச. இராமலிங்க முதலியார், கண்டாச்சிபுரம்.

### பிரசோற்பத்தி பங்குனி ௧௬௨ வந்துள்ள விடுகவி விடை.

ஆறெழுத்தூர் நற்பலவான் குடியதாகும்—அடிமுடியா
மிரண்டெழுத்தை யாழ்ந்து நோக்கில்
அவனியுளோ ரளவுசெயும் படியாகும்மால்—அழகுறுநீள்
கடையெழுத்தா மிரண்டுஞ் சாரில்
வீறுகுடி யாம்மருத நிலத்தூர்ப் பேரே—விரும்பியே
கடையெழுத்தி லிரண்டு நீக்கில்
விளங்குமந் நான்கெழுத்தும் பலவானென்று—விருப்பமுட
னொன்றிரண்டா மெழுத்தி னோடு
கூறுகின்ற வைந்தாறு மெழுத்திரண்டுங்—குணமுடனே
யகற்றில்வா னாகும் நன்றாய்
குலவுமுத லிரண்டுட னாலெழுத்தைக்—கூட்டினாற்
பலமென்று வழங்கு மன்றே

-தேறுமூன் றைந்தெனுமீ ரட்சரத்தைச்—சேர்க்கினது
வாகாகும் தெளிவீர் நன்றாய்
. சிவநேசன் றனைவளர்க்கும் ராமசாமி—திகழ்ந்துறையும்
நகர்ப்பேரின் சிறப்பிதாமே.

திரு. வி. எஸ். மாரியப்பனவர்கள்,
சுவாமி விருதை சிவஞான யோகிகளின் மாணாக்கர், கோவிற்பட்டி.

முதலாவது விடுகவி வினாவுக்குவிடை.

பங்குனி மாதம் பயிலிரண் டாந்தேதி
தங்குசிவ நேசன்பாற் சார்ந்தவினா—வங்கிரண்டிற்
பல்வளங்கள் சேரும் பலவான் குடிமுதற்கா
நல்விடையா மென்றே நவில்.

1. பலவான்குடி—ஊர்.
2. படி—அளவுகருவி.
3. குடி—மருதநிலத்து ஊர்
4. பலவான்—தைரியவான்
5. வான்—ஆகாயம்.
6. பலம்—பிரயோஜனம்.
7. வாகு—வெற்றி.

இரண்டாவது விடுகவி வினாவுக்கு விடை.

காசினி தேவகி கன்னி திநேச
பாச வநீதி பகருடு—நீசனொடு
காகம்ப வானி கடுந்தாழ்வா மிப்பெயர்க
ளாகுமிரண் டாவதற்கென் றாய்.

| பாட்டின் வினா | விடை |
|---|---|
| 1. புவியின்பெயர்— | காசினி |
| 2. கருடன்மிசையூர்வோன் தாயின்பேர்- | தேவகி |
| 4. இருளை ஓட்டும் சுடர்ப்பேர்— | திநேச |
| 7. சிவன்பேர்— | ஈசன் |
| 3. வதுவையிலாச் சிறுமிபேர்— | கன்னி |
| 5. நீதியறு செய்கைப்பேர்— | அநீதி |
| 6. பாதகண்டப் பாடைப்பேர்— | உடுது |
| 9. இறைவன்பாதிகொண்ட தேவிபேர்— | பவானி |
| 10. மனிதரடை சிறுமைப்பேர்— | தாழ்வு |
| 8. ஒரு பறவைப்பேர்— | காகம் |

இவற்றின் நடுவெழுத்துக்களைச் சேர்த்துப்படிக்க சிவநேசன் நீடு வாழ்க என அமைதல் காண்க.

திரு. கண. நித்தியாநந்தசுவாமிகள், மேலமடம், துன்பக்குடி.

உ

# நகைச்சுவையும் புலவர்களும்.

(தமிழ்ப் பொழிலில் S, இராமச்சந்திரன் B. A. அவர்கள் எழுதியது.)

நமது நாட்டுப்பண்டையத் தமிழ்ப்புலவர்கள் கவிபாடுந்திறமையில் மட்டுமல்லாது சமயோசிதமாக நகைச்சுவை பெருக்கும் வசன சாதுரியத்திலும் எத்துணையோ சிறப்புற்று விளங்கினர். பிறர்முன் பேசும்பொழுது இருபொருள் பயக்குஞ் சொற்களாய் இடத்திற்கேற்ற தகுதியனவாய் முன் பின் நினைத்துவைத்துச் சொல்லாது அவ்வப்போது உடனுக்குடன் நயம்படப் பேசிய அறிவுடை மறுமொழிகள் எண்ணிறந்தன. அவைகள் கேட்போருக்கின்பம் பயப்பதோடமையாது அறிவைக் கூராக்கவும் வல்லனவாதலின் ஈண்டு சிலவற்றைக் குறிக்கலானேன்.

எட்டையபுரத்து ஆத்தான வித்துவானாக இருந்தகடிகை முத்துப்புலவர் ஒருநாள் தம்மனைவியின் திவசத்திற்காகக் கடையில் சிலபண்டங்களை வாங்கி அவைகளை மூட்டையாகக் கட்டித் தலையிற் சுமந்து வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அச்சமயம் எட்டையபுரத்தரசன் புலவரை அந்நிலையில் தற்செயலாய்க் காணவே மனமிரங்கி புலவரே! என்னமூட்டை சுமந்துகொண்டு போகிறீர்? என்று கேட்டார். புலவரோ சற்றுந் தயங்காது 'அரசே! என் தலைவிதி வசம்'. என்று இப்பண்டங்கள் தலைவி திவசத்திற்காக என்றும், இம்மூட்டையை இவ்வாறு சுமப்பது தலைவிதி வசம் என்றும் இருபொருள் பட்டு நகை விளைக்கும்படி பதிலளித்தார். அரசன் புலவரின் வாக்குநயத்தைக்கண்டு பெரிதும் வியந்ததுடன் அன்றுமுதல் புலவர்க்கு ஏவலாளன் ஒருவனையும் அமைத்துக் கொடுத்தாராம்.

இப்புலவர் பெருமான் நோய்வாய்ப்பட்டு மரணப் படுக்கையில் கிடக்கும்போது இவர்மகள் பாலைத் தவறுதலாக அழுக்குத்துணியில் நனைத்து புலவர் வாயில் பிழியவே, அப்பால் அழுக்குநாற்றம் வீசிய துணரந்து உட்கொள்ளாது வெளியில் துப்பினர். அதைக் கண்ட மகள், தன் தந்தைக்குப் பால் கசப்பது மரணக்குறி என்று நினைத்து, 'அப்பா! பாலுங்கசக்குதோ?' என்று கண்ணீர் பெருகக்கேட்டாள். அதற்குப் புலவர் 'பாலுங் கசக்கவில்லை, துணியுங் கசக்கவில்லை' என்று பதிலளித்தாராம். ஈண்டு தன்மகள் செய்த தவறுதலை நகைச்சுவைபயக்க புலவர் எடுத்துக்காட்டியது எத்துணை வியப்பு!

புலவர் உயிர்பிரியுந் தருணங்கண்டு அவர்தம் மக்கள் அப்பா! எங்களைவிட்டுப் போகிறீர்களே; எங்களுக்கு இனி யார்துணை? என்றுகதறினர்கள். அப்போதும் புலவர் தம்மக்களை நோக்கி' 'உங்களுக்கு எட்டப்பன் இருக்கும்போது நான் ஒரு அப்பன் போனால்

என்ன? அழாதீர்கள்.' என்று கூறி வருத்தத்தில் ஆழ்ந்திருந்த சுற்றத்தார் அனைவரையும் அங்கும் வயிறு குலுங்க நகைக்கவைத்தாராம். எட்டப்பன் என்பது எட்டு அப்பனையும் இவரை ஆதரித்து வந்த எட்டயபுரத்து அரசனாகிய 'எட்டப்பனையும்.' குறிப்பதுகாண்க.

இராமநாதபுரம் சமஸ்தானம் அருங்கலை விநோதரும் பெருங்கொடை வள்ளலுமாகிய பொன்னுச்சாமித்தேவரால் பெரிதும்போற்றப்பட்டு 'சம்ப்ரம வளம்பெருகு தென்முகவையம்பதி தழைக்க வரு சந்த்ரோதயம்' என்று புகழப்பெற்று பொலிந்து மிளிர்ந்த மாம்பழக் கவிச்சிங்க நாவலர் ஒருநாள் தேவரைக்காண அவர் வீற்றிருந்தமண்டபத்திற்குச் சென்றார். புலவர் அந்தகரானமையால் மண்டபத்தின் படியில் மெல்ல மெல்ல ஏறிச்சென்றார். அதுகண்டதேவர் கவிராயரே என்ன படிதட்டுதோ? என்று வேடிக்கையாகக் கேட்டார். புலவர், குலத்தில் ஆசாரியானமையால் தன் குலத்தொழிலாகிய படிதட்டுதலைக் குறிப்பது கருதி நாவலர் சற்றும் தயங்காது 'இருந்தாலும் மரப்படிதானே, என்று இடையின ரகரத்தைச் சற்று அழுத்தி மறப்படி என்னும் ஓசைதரும்படி பதிலிறுத்து தேவரின் குலமாகிய மறவர் குலத்தைச் சுட்டிக்காட்டவே தேவர் சரேலெனத் தம் இருக்கையை விட்டெழுந்து கைலாகு தந்து புலவரைத் தம்பக்கத்தில் அமர்த்திக்கொண்டு ஆனந்தித்தாராம். என்னே புலமையின் மாண்பு!

மற்றொருநாள் கவிராயர் தேவரைக்காண விரும்பினார். அப்போது தேவர் நெற்களத்திற்குச் சென்றிருந்தமையால் கவிராயர் அங்குச் செல்லவேண்டியதாயிற்று. தேவர் அப்போது நெற்பயிர்களை அறுவடைசெய்து கட்டாகக் கட்டுவதை மேற்பார்த்துக் கொண்டிருந்தார். அறுவடையான வயல்களைக் கடந்துசெல்லும்போது பயிரின் அடிக்கட்டைகள் பாதத்தை உறுத்தியதால் கவிராயர் காலைத்தூக்கித் தூக்கி வைத்து மெதுவாகச்சென்றார். இதைக்கண்ட தேவர் நகைத்து 'என்ன, கவிராயரே! விலைமகள் போலும் நடிக்கிறீர்' என்று பரிகசித்தாராம். உடனே கவிராயர் 'அங்கு என்ன அறுத்துக்கட்டுதோ?' என்று சிரித்துக்கொண்டே கேட்டாராம். அம்மொழிகேட்ட தேவர் நல்லிசைப் புலவரின் வல்லமையை வியந்து புலவரை மார்புறத் தழுவிக் கொண்டாராம்.

அறுத்துக்கட்டுதல் என்பது நெற்பயிரை அறுவடை செய்து கட்டாகக் கட்டுதல் என்பதொரு பொருளையும் கைம்பெண்களை மறுமணம் புரிதல் என்பதொரு பொருளையும் தந்து நிற்றல்காண்க.

போடிநாயக்கனூர் சமீன்தாரைக் காணச்சென்ற சில வித்துவான் தங்கள்வரவை சொல்லி அனுப்பி உத்தரவுபெற்று உள்ளே சென்றார்கள். அவர்களைக்கண்ட சமீன்தார் வாருங்கள் கவிக் கூட்டங்களே என்று வரவேற்றார். கவிக்கூட்டம் என்ற தொடர், கவிஞர்கூட்டம் என்றும் குரங்குக்கூட்டம் என்றும் இருபொருள்பட



இருத்தலை யறிந்த அவ்வித்துவான்களில் ஒருவரான திருமலைக் கொழுந்து கவிராயர் 'பிரபுவே தாங்கள் தருப்போலிருத்தலால் இங்கு தானே கவிகளெல்லாம் வரவேண்டும்' என்று கவிஞர் கூட்டம் என்பதற்கேற்ப 'கற்பகதரு' என்றும் குரங்குக்கூட்டம் என்பதற்கேற்ப 'மரம்' என்றும் இருபொருள்பட மறுமொழி கூறினாராம். சமீன்தார் கவிராயரின் புலமைத் திறமையைப் பெரிதும் கொண்டாடி பரிசில் தந்து உபசரித்தனுப்பினாராம். கற்றாரைக் கற்றாரே காமுறுவர்!

ஒரு மடாதிபதியைக் கண்டு பரிசில்பெற புலவர்ஒருவர் சென்றார். புலவரைக் கண்டதும் மடாதிபதி 'வாருங் கல்விக் கிரகமே' என்று வரவேற்றார். புலவர் மடாதிபதியின் குறும்பை யறிந்துத் தானும் அதற்கேற்ப 'வந்தேன் மடத்தடிகளே' என்றாராம். மடாதிபதி புலவரின் சமயோசித சொல்லுக்குப் பெரிதும் மெச்சி தக்க பரிசில் தந்தனுப்பினாராம். 'கல்விக்கிரகம்' என்றசொல் கல்விக்—கிரகம் (படிப்பிற் கிருப்பிடம்) என்றும், கல்—விக்கிரகம் (கற்சிலை) என்றும் இருபொருள் படுதல்போல் 'மடத்தடிகள்' என்ற சொல் மடத்து—அடிகள் என்றும் மட—தடிகள் என்றும் இருபொருள் படுதல் காண்க. முற்றுறக் கற்றோரின் பெற்றிதான் என்னே!

விறலிவிடுதூது கூளப்ப நாயக்கன் காதல் என்னும் அழியாப் புகழ்படைத்த அரும்பெருந் தமிழ்நூல்களை இயற்றியவரும்' ஒன்பதூர் சமீன் சமத்தான வித்துவானுமாகிய சுப்பிரதீபக் கவிராயர் ஒருநாள் பல பட்டடைச் சொக்கநாத முதலியார் வீட்டிற்குச்சென்றார். அப்பொழுது முதலியார் படித்துக் கொண்டிருந்தார். கவிராயரைக் கண்டதும் சொக்கலிங்க முதலியார் 'கவிராயரே! வாரும் இரும்படியும்' என்று இரும் படியும் என்ற இருசொல்லையும்சேர்த்து புலவர் என்பதற்கேற்ப இரும் படியும் என்ற உபசரணைப் பொருளும் புலவர் ஆசாரியானமையால் அக்குலத்திற்கான கருமாரத் தொழிலாகிய இரும்பு அடியும் என்ற பொருளும்பட வேடிக்கையாக வரவேற்றார். சுப்பிரதீபக் கவிராயரா இலேசில் விட்டுவிடக் கூடியவர். அதற்கேற்ப, 'பட்டடைச் சொக்கா! குறட்டைச் சிக்கெனப்பிடி' என்று சுடச்சுட பதிலிறுக்கவே முதலியார் கவிராயரின் கூரிய புத்திநுட்பத்தையும் சொல்வன்மையையும் பெரிதும் போற்றிக்கொண்டாடினாராம்.

'இரும் படியும்' என்ற உபசரணைப் பொருளுக்கேற்ப நான் படிக்க ஆரம்பித்தால் உன் புலமை என் முன் நிற்கமாட்டாது ஆகையால் நீ குறட்டை விட்டுச் சட்டென்று தூங்க வேண்டியது தான் என்றும், 'இரும்பு அடியும்,' என்ற பொருளுக்கேற்ப 'பட்டடைப் பையனாகிய சொக்க! நான் இரும்பு அடிக்கும்போது நீ குறட்டால் இரும்பைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்' என்றும் பொருள் தோன்றும் வியப்பைக் காண்க.

இராசபாளையம் சங்கரமூர்த்திக் கவிராயர் என்னும் அருங்கவிப்புலவர் ஒருவர் கன்னிவாடியிற் சென்றிருந்தபோது ஒருநாளிரவு கன்னிவாடி சமீன்தாராகிய தோட்ட மலையாண்டி யப்பைய சாமிநாயக்கர் புலவரைக்காணவேண்டி கவிராயரிருந்த வீட்டுள் நுழைந்தார். அப்போது புலவர் கூடையைக் கவிழ்த்து அதன் மேல் ஒரு விளக்கை வைத்து அவ்வெளிச்சத்தில் படித்துக் கொண்டிருந்தார். இதைக் கண்ட சமீன்தார். 'இதென்ன கூடை விளக்கு?' என்றார். அதற்குப் புலவர் 'தங்கள் அரண்மனையில் தங்களுக்கு முன் ஒரு குத்துவிளக்கு வைக்கப்பட்டிருக்கும், என் வீட்டிலோ நான் ஒரு கூடை விளக்கு வைத்திருக்கிறேன்' என்று நகைச்சுவைபெருக பதிலுரைத்தாராம். இதுவும் புலமையின் விளைவன்றோ? (குத்து என்பது ஒரு பிடியளவு அதாவது சிறிய அளவு.)

சிவகங்கை அரசர் ஒருநாள் தன் வாயில் வித்துவானாகிய வேற்கவிராயருடனும் மற்றும் பல புலவர்களுடனும் அளவளாவிக் கொண்டிருந்தார். அது சமயம் அவ்வரசனைக் காணவந்த புலிக்குட்டிக் கவிராயர் வாசலில் நின்றுகொண்டு 'புலி வருகின்றது, என்று அரசனுக்குச் சொல்லி அனுப்பினார். இச் செய்தியைக் கேட்ட அரசன் புன்னகை பூத்து 'அப்படியா இங்கு 'வேல்' இருக்கிறது; தைரியமிருந்தால் 'புலி' வரட்டுமே' வென்றாராம், புலிக்குட்டிக் கவிராயர் வருகிறார் என்பதற்கேற்ப இங்கு அவரை எதிர்த்து நிற்கக்கூடிய வேற்கவிராயர் இருக்கிறார் என்றும் புலிவந்தால் அதை ஒறுக்கக்கூடிய வேல் இங்கு இருக்கிறதென்றும் பொருள் படுதல் கண்டு, அங்குக் குழுமியிருந்த புலவர்கள் கைகொட்டி நகைத்து அரசனைப் புகழ்ந்தார்களாம்.

ஒருநாள் புலிக்குட்டி கவிராயர் சிங்கவனம் சமீன்தாரைக் காணச் சென்றார். அப்போது அவ்வூர் ஆத்தான வித்துவான் இவரைப்பார்த்து 'தாங்கள் யார்' என்று கேட்டார், கவிராயர் வெகு இறுமாப்புடன், 'நாம் புலிக்குட்டிக் கவிராயர்' என்றார். உடனே அவ்வாத்தான வித்துவான் 'ஓகோ! அப்படியா, சிங்கவனத்தில் புலிக்குட்டி உலாவ வந்துளவோ' என்று கூறி கவிராயரின் இறுமாப்பொடுங்க நகைத்தாராம். சிங்கம் உலாவும் வனத்தில் புலிக்குட்டிக்குப் பெருமை இல்லை என்ற குறிப்பு தோன்றுதல் காண்க. மாமிக்கோர் மாமியுண்டு, வாணருக்கோர் வாணருண்டு, சாமிக்குமேல் தகப்பன் சாமியுமொன் றுண்டன்றோ!

கல்போதி ஜமீன் ஆத்தான வித்துவானாகஇருந்த பெரியதம்பி ஆசாரியார் ஒருநாள் இரட்டியார் சாதிப் புலவர் ஒருவருடன் பேசிக்கொண்டே வயல் பக்கமாகச் சென்றாராம். அப்போது அவ்விரட்டியார் பெரிய தம்பி ஆசாரியாரை நோக்கி, 'என்ன புலவரே தட்டான் பயிர் நன்றாகக் காய்த்திருக்கிறதா, பாரும்?' என்றாராம்.



உடனே பெரிய தம்பிப் புலவர், 'ஆகா! இரட்டி உழவானால் காய்க்கத் தடையென்ன?' என்று மறுமொழி யளித்தாராம். இரட்டி உழவு என்பது இரண்டு முறை உழவு செய்த நிலமென்று ஒருபொருளும் உழவுசெய்த குடியானவர் இரட்டியார் என்று மற்றொரு பொருளும் தந்துநிற்கும் விந்தையைக் காண்க.

ஒருநாள் இப்புலவரும் அச்சமீன் தானாபதியின் பிள்ளையாகிய வேளாளர் ஒருவரும்மழைபெய்து ஓய்ந்தசமயம் புன்செய்ப்பக்கமாகவந்து சேர்ந்தார்கள். அப்பொழுது ஒரு தட்டாரப் பூச்சி அதன் குஞ்சுடன் பறந்து சென்றது. அதைக்கண்ட தானாபதிப்பிள்ளை புலவரைநோக்கி 'அதோ தட்டான் பறக்கிறதைப் பாருமையா' என்று பரிகாசமாகச் சொன்னார். அதற்குப் பெரியதம்பிப் புலவர் சிரித்துக்கொண்டே 'பிள்ளையும் கூடப் பறக்கிற பறப்பைப்பாருமையா' என்று பரிகசித்தாராம். இஃதன்றோ பொருத்தமுள்ள பொருளையா!

தேவகோட்டை வித்துவான் வன்றொண்டச் செட்டியார் தன்னுடன் ஒரு சாலை மாணவராகப்பயின்ற திருவாவடுதுறை ஆதீனம் சின்னப்பண்டாரச்சந்நிதி ஸ்ரீலஸ்ரீ நமசிவாய தேசிகரைக் கண்டு நீண்ட நாளாகிவிட்டபடியால் அவரைக்காணச் சென்றார். தேசிகர் செட்டியாரை வரவேற்று அளவளாவிக் கொண்டிருக்கும் போது செட்டியாரின் கல்வித்திறமையை வியந்து மிகவும் புகழ்ந்து பேசினார். அதற்குச் செட்டியார் சிரித்துக்கொண்டே 'நான் சந்நிதானத்திற்குக் குறைபப்படித்திருந்தாலும் கூடப்படித்தவன் என்பது பற்றி சந்நிதானம் இவ்வாறு அருளியதுபோலும்' என்று நயம்பட மாற்றுரை கூறினாராம். அதன் பொருள்நயத்தைக் கண்டு அங்கிருந்தோர் அனைவரும் செட்டியாரைப் பெரிதும் பாராட்டினார்களாம். கூடப்படித்தவன் என்பது அதிகமாகப் படித்தவன் என்றும் ஒரு சாலை மாணவனாக உடன்பயின்றவன் என்றும் இருபொருள் தருவது அருமையன்றோ!

புலவரொருவர் தல யாத்திரையாகச் சென்றபோது ஒரு சிவத்தலத்தில் தங்கினார். அச்சமயம் பசியெழவே புலவர் அக்கோயில் அதிகாரியைக் கண்டு 'ததியோதனமாவது புளியோதனமாவது கொஞ்சம் கிடைக்குமோ?' என்று கேட்டார். அக்கோயில் அதிகாரி இவர்பேசிய வசனத்தால் புலவரென்றறிந்து உடனே மடப்பள்ளிக்காரனை விளித்து புலவர்க்கு வேண்டிய அளவு அவ்விரண்டு சாதங்களையும் கொடுக்கும்படி உத்தரவிட்டார். புலவர் அவற்றை வாங்கி யுண்ணும்போது கல்லும் நெல்லுமாக இருக்கக்கண்டு உண்ணமுடியாமல் தயங்கிக் கொண்டிருந்தார். அதுகண்ட அதிகாரி 'சாப்பாடு எப்படி இருக்கிறது?' என்று கேட்டார். அதற்குப்புலவர் 'ஐயா! தாங்கள் உத்தரவிட்ட ததியோதனமும் புளியோதனமும் எள்ளோதனமாக இருக்கின்றன' என்று நகைச்சுவை தரக்

கூறினாராம். எள்ளோதனம் (எள்—ஓதனம்) என்பது எள் சாதம் என்றும் எள்ளும் அதாவது இகழப்படும் சாதம் என்றும் இருபொருள்படும். அதிகாரியும் அறிஞானமையால் இச் சிலேடைப்பொருளையுணர்ந்து 'அன்னம் அறியாதவர்க்கு இவ்வளவு போதாதோ' என்று மறுமாற்றஞ் சொல்லி, அக்கோயில் சிவன்கோவில் ஆதல் பற்றியும் சுவாமியும் சிவபெருமான் ஆதல்பற்றியும் அவர் அன்னம் அறியாதவர்—உணவு கொள்ளாதவர் என்றும் பிரமனாகிய அன்னத்தால் அறியப்படாதவர் என்றும் உட்பொருள் தோன்ற மறுமொழி தந்து புலவரைக் களிப்பித்து உபசரித்து அனுப்பினாராம். 'அன்னமறியா ரெடுப்பதையமோ அம்மானை' என்ற அருணைக்கலம்பக அம்மானை அடிஈண்டு சிந்திக்கத்தக்கது.

ஒருபுலவர், கற்றோரும் மற்றோரும் விரும்பிக்கற்கும் காவடிச் சிந்தெனும் துறைபடுத்த நறுந்தமிழ் நாலை உலகிற்களித்த சென்னிகுளம் வித்துவான் அண்ணாமலை இரட்டியாரைக் காணச்சென்று அவரைக் கருவைநல்லூரில் சந்தித்தார் இருவரும் அளவளாவிக் கொண்டே கோயிலுக்குள் சுவாமிதெரிசனத்திற்குச் சென்றார்கள். அப்போது 'இவ்வூரில்சாமி களவாண்டவரோ? என்றுபுலவர்நகைச் சுவையுடன் கவர் பொருள்பட இரட்டியாரை வினவினர். உடனே இரட்டியார், 'அதனால்தான் அவர் மறைவாய் இருக்கிறார்.' என்று பதிலளிக்கவேபுலவர்இரட்டியாரின் இரட்டிப்பான புத்தியை வியந்து கொண்டாடினாராம்.

களவாண்டவர் என்பதை களா—ஆண்டவர் என்றும் களவு—ஆண்டவர்என்றும்இருவகையாகப்பிரிக்கலாம். கருவைநல்லூர்த்தல விருட்சம் களாமரம் ஆகும். அதனடியில் சிவபெருமான் எழுந்தருளியிருப்பதால் களாஆண்டவர் என்பதற்கு களா மரத்தினடியில் வீற்றிருப்பவர் என்று பொருள்படும். களவு—ஆண்டவர் என்று பிரிக்குமிடத்துதிருட்டைக்கைக்கொண்டவர் என்று பொருள்படும் இதற்கேற்ப மறைவாய் இருக்கிறார் என்ற சொல் வேதப்பொருளாய் வேதத்தினிடத்தே (மறை—வாய்) இருக்கிறார் என்றும் ஒளிந்துகொண்டு மறைவாய் இருக்கிறார் என்றும் இருபொருள் தரும். இதுவன்றோ இன்னிசைப் புலவரின் பொன்மொழிப் பொலிவு! (களவு என்பதற்கு களாமரம் என்ற பொருளும் உண்டு.)

திருப்பனந்தாள் தம்பிரான் ஸ்ரீலஸ்ரீசொக்கலிங்கசுவாமி தமது இளம்பிராயத்தில்திருவாவடுதுறை ஆதீனம்பண்டாரசந்நிதி ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரிடத்தில் பாடங்கேட்டு வந்தார். அம்பலவாணதேசிகர் பாடஞ்சொல்லிக் கொடுக்குங்காலத்தில் மடக்கி உட்கார்ந்த கால்களை இடையில் பிரித்துமடக்காமல் உட்கார்ந்த வண்ணமாகவே பாடஞ் சொல்லிக்கொடுப்பது வழக்கம். ஒருநாள் அதிக நேரம் ஆகிவிட்டதால் காலில் சிறிதுவலி ஏற்படவே மடக்கி ஆசன



மிட்டிருந்த கால்களைப் பிரித்துமாற்றி மடக்கிக்கொண்டு உட்கார்ந்தார். இதை எதிரில் உட்கார்ந்து பாடங்கேட்டுக் கொண்டிருந்த சொக்கலிங்க சுவாமி என்றுங்காணாத காட்சியென வியப்படைந்து 'அம்பலவாணனும் கால்மாறினனே!' என்று கூறினர். அதற்கு அம்பலவாண தேசிகர் சற்றும்தயங்காமல் 'அதுவும் சொக்கலிங்கத்திற்கு முன்புதானே, குற்றமில்லை' என்று நகைச்சுவை ததும்பப் பதிலுரைத்தாராம்.

கால்மாறியது என்பது, மதுரையில் சொக்கலிங்கப்பெருமான் கோயில் வெள்ளியம்பலத்தில் அம்பலவாணன் 'கால்மாறி யாடின திருவிளையாடலைக்' குறிக்கும். இங்கேயும் சொக்கலிங்கத்தம்பிரான் முன்னிலையில் அம்பலவாண தேசிகர் கால்மாறி மடக்கி உட்கார்ந்ததாகக் கூறிய பொன்மொழியில் பொருத்தம் பெரிதும் பாராட்டற்பாலதன்றோ!

இம்மாதிரி நகைச்சுவை பெருக்கும் பற்பல பொருள்கள் ஏட்டில் எழுத்தில் காணமுடியாமல் கர்ணபரம்பரையாய் நமது தமிழ்நாட்டில் மிளிர்கின்றன. அக்காலத்தைப் போல் கற்றவர்களை ஆதரிக்கும் கொற்றவர்களின்மையால் செந்தமிழ்ப் புலவர்கள் மேன்மேலும் விருத்தியடையாமல் அருகி விட்டனர் என்பதை எண்ணுமிடத்து யார்தான் கண்ணீர் விடாமலிருக்கமுடியும்.

செந்தமிழ்ப் புலமைத் திருநாடொளிர
அந்தமில் சோதி அருள்வது கடனே.

---

* தேவகோட்டை வித்துவான் வன்றொண்டச் செட்டியாரவர்கள், தம்பாற் கலைபயில் மாணவராகிய ஐயர் ஒருவர் நெய்த்தானம் ஏற்றாரெனக் கேட்டு அவரை வெறுத்தனர். ஐயர், குன்றக்குடியிலுள்ள திருவண்ணாமலை ஆதீன வித்துவான் அப்பாவுபிள்ளை அவர்களைக் கண்டு நிகழ்ந்ததைத் தெரிவித்தனர்.

பிள்ளையவர்கள், செட்டியாரவர்களிடம் போந்து சைவமக்கள் தமக்குச் சிறப்பாகக்கொண்டுள்ள 'நெய்த்தானத்தை' உவப்பதோ? வெறுப்பதோ? என்றனர். இருபொருட்சிலேடையாக திருநெய்த்தானம் என்னும் சிவத்தலத்தை குறிப்பிட்டமைக்கு மகிழ்சிறந்து நெய்த்தானத்தை உகந்த ஐயரை உவந்து கொண்டனர் என்பர். இன்னோரன்ன சிலேடை நயங்கள் புலவர் பெருமக்களோடு கூடி அளவளாவுவோர்க்கே பெருவிருந்தளித்துப்பெரிதும் இன்பம்பயப்பதாகும்.

---

உ

# சிவம் தாருகாவனத்தில் நிர்வாணியாய்ச் சென்றதற்கு நியாயம்

(சுதுமலை சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் அவர்கள்.)

தாருகாவனத்து முனிவர் தங்கள் பக்குவநிலைக்கேற்பக்கர்மத்தையே பிரதானமாகக் கொண்டு செய்து நல்லறிவின்றிக் கடவுளை வழிபடுதலாகிய சிவபுண்ணியப் பேறில்லாதவரா யிருந்தனர். பின்பு, வேதவிகிதமான வைதிககர்மங்கள் எல்லாவற்றையுஞ் செய்து முடித்த புண்ணிய விசேடத்தினால் ஒருவகையான பக்குவம் வந்து பொருந்த, அதற்கேற்பத் தம்மையுணர்த்தி உய்வித்தல் காரணமாகவும் சிவபுண்ணியப்பகுப்பில் அவரை ஈர்த்து நிறுத்துதல் காரணமாகவும் பெருமான் நிர்வாணவடிவத்தைக் கொள்ளுவாராயினர்.

கொண்டபொழுது தமருகமும், பிட்சாபாத்திரமும், மோகினியும், மானுமுடையராய் முனிவர்முன் வெளிப்பட்டு அருள் செய்தனர். மனமிரக்கமுள்ள ஒருவைத்தியர் நோயாளியின் நோய்க்கேற்ற மருந்து செய்தல் அவரதுசெயல்.

அவருடைய திருக்கரத்திலுள்ள தமருகமாகிய உடுக்கை விந்துவாம்; விந்துவாவது சுத்தமாயை, அவர் பக்கத்துள்ள மோகினி அசுத்தமாயை; மான் மூலப்பிரகிருதி. விந்து மோகினி மான் எனப்படும் மூவிதமாயைகளும் அவராலே காரியப்படுத்தப் படுவனவாதலின், அவை இவ்வாறு இங்கே பாவிக்கப்படுவனவாயின. விந்துவாகிய சுத்தமாயையிலிருந்து நாதந்தோன்றி விந்துதோன்றி இப்படியே ஏனையவும் தோன்றும். தமருகத்திலே நாதவொலியுண்டாம். நாதமாகிய காரியந் தோன்றுதலைச் சாமியமாக வைத்து அந்தச் சுத்தமாயை தமருகவடிவாகப் பாவிக்கப்படுகின்றது. மயக்குந் தன்மையால் அசுத்தமாயைக்கு மோகினியென்று பெயர். குணவொற்றுமையும் பெயரொற்றுமையும் வைத்து ஒருமோகினிப்பெண்வடிவாக அசுத்தமாயை பாவிக்கப்படும்.

மகான் என்னும் வடமொழி மான் என்று திரிந்து நிற்கும். மகான்மான் என்னுஞ் சொற்கள் பிரகிருதி மாயையின் பெயர். மான் என்றும் பெயர் ஒரு மிருகத்துக்கும் உள்ளது. அப்பெயர் ஒற்றுமை கொண்டு பிரகிருதி மான் என்னும் மிருகம்போற் பாவிக்கப்படும். பூசை தியானங்களிலே அவரவர்செய்த கர்மங்களைத் தம்மால் வழிபடப் படும் மூர்த்தியினிடத்துத் தத்தம் பண்ணிவிடுதல் எல்லோரும் அறிந்தவிஷயம். தம்மை வழிபடுவோரால் அவ்வாறு தத்தம் பண்ணப்பட்ட சிவபுண்ணிய கர்மங்களை ஏற்றலே பலிபேற்றலும் அதையேற்கும் அருட்குறையே பிட்சாபாத்திரமுமாம்.

சுத்தமாயா சொரூபமான தமருகமும் பிட்சா பாத்திரமும் திருக்கரங்களிலமைய, ஏனை அசுத்தமாயையாகிய மோகினி பக்கத்திருப்பப், பிரகிருதிமாயையாகிய மான்பின் தொடரவிருத்தல், சுத்தமாயையில் நடக்குந் தொழில் அவரால் நேரேசெய்யப் படுவதென்பதும், அத்தொழில் அவரவர் செய்த பூசைதியானங்களாகிய சிவபுண்ணியங்களை ஏற்றுப் பயனளித்தலா மென்பதும் விளங்கக் காட்டும் குறிப்புகளும், அசுத்தமாயை பிரகிருதிமாயைகள் அங்ஙனமின்றி அவராற்புறத்து வேறாகவைத்து அதிட்டானவகையாற் செலுத்தப்பட்டுக் காரியப்படுத்தப்படுவன வென்னுங் குறிப்புகளுந்தோன்றக் காட்டும் பாவனைகளாம். (தொடரும்)



## குடும்பமே பெண் உலகம்.

பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை எதிர்ப்பதில் ஜெர்மனி சர்வாதிகாரியான ஹெர். ஹிட்லர் அதி தீவிரமானவர். நூரம்பர்க் காங்கிரஸ் மண்டபத்தில் 20, 000 பெண்களடங்கிய கூட்ட மொன்றில் அவர் சமீபத்தில் பேசியபோது கூறியதாவது.

உலகத்தில் பெண்கள் வகிக்கவேண்டிய ஸ்தானத்தை திட்டமாகக் கூறவேண்டு மென்பது எனது விருப்பமாகும். பெண்கள் விடுதலை என்ற வாக்கியமானது யூதர்கள் தங்கள் புத்திசாலித்தனத்தினால் கண்டுபிடித்த வாக்கியமாகும். ஜெர்மனிப்பெண்கள், தாம்விடுதலையடைய வேண்டுமென ஒருபோதும் விரும்பியதில்லை. எவ்விஷயத்தை நிர்வகிக்க இயற்கையானது அவர்களுக்கு விதித்திருக்கிறதோ, அதையே அவர்கள் நிர்வகிக்க விரும்புகிறார்கள்.

ஆடவர்களுடைய உலகத்தைக்காட்டிலும் பெண்கள் உலகமானது சிறியதாகும். கணவன், குடும்பம், வீடு இவைகள் தான் பெண்களின் உலகமாகும். இவ்வுலகில் கடவுள் பெண்களுக்குப் போதிய கவலைகளை அளித்திருக்கிறார். அதிலிருந்து தான் ஆடவர்களுடைய உலகத்தை அமைக்க முடியும். அவ்விருசாராரும் ஒருவரை யொருவர் ஒரு போதும் எதிர்ப்ப தில்லை. அவர்கள் பரஸ்பரம் உதவியாக இருப்பவர்கள். தேசிய அபேதவாத பெண்களின் திட்டம் குழந்தைகளை க்ஷேமத்துடன் வளர்ப்பது தான். ஆடவருடைய உலகில் பெண்கள் தலையிடுவது தவறாகும். கடவுள் ஒன்றாக வைத்திருக்கும் ஆடவர்–பெண்களைப் பிரிக்க முற்படுவதை நாம் எதிர்த்து வெற்றி பெறுவோம்.

ஹிட்லர் அவ்விதம் கூறியதைக்கேட்டு நாஜிப்பெண்கள் பலத்த கரகோஷம் செய்தனர்.

இவரது உரை நாகரீகத்தில் ஆழ்ந்து ஆண்களுடன் போட்டி போடும் இதர மேல்நாட்டு ரமணிகளுக்குப் பிடிக்காது. எனினும் மேல்நாட்டு மின்னலைக் கண்டு மயங்கும் இந்திய மணிகளுக்கு இது நல்ல பாடத்தைக் கற்பிக்கும். ('முன்னேற்றம்')

உ

# ஆராய்ச்சி.

கந்தவனம் தேவஸ்தானம் தருமகர்த்தா
திக்கம் திரு. சி. செல்லையா பிள்ளை அவர்கள்.

## கண்ணப்ப நாயனார் புராணம். கருசு-ம் செய்யுள்

"முன்புதிருக் காளத்தி முன்னவனா ருருணைக்கி
னின்புறுவே தகத்திரும்பு பொன்னானாற் போல்யாக்கைத்
தன்பரிசு மிருவினையுஞ் சாருமல மூன்றுமற
வன்புபிழம் பாய்த்திரிவா ரவர்கருத்தி னளவினரோ"

(இ - ள்.) இரசகுளிகையின் பரிசத்தால் இரும்பானது வன்மையுங்கருமையுந்திரிந்துமென்மையும் பொன்மையுமடைந்துபொன்னானாற்போலதிருக்காளத்திமலையின்கணெழுந்தருளியிருக்கும்முதல்வராகிய காளத்தியப்பரது திருவருணோக்கத்தால் இருவினைப்பாசமும் மும்மலபந்தமுமற்று ஆன்மநிலை திரிந்தவன்றே தூலவுடம்பின்றன்மையும் பேரின்பநுகர்ச்சிக்குரிய அன்புருவாய் மாறினவராகிய திண்ணனார் அம்மந்தசாமதியினராகிய வனசாரது கருத்தினளவாயுள்ளாரோ? அன்று

வேதகத்திரும்பு பொன்னானாற்போல திருக்காளத்தி முன்னவனார் அருள்நோக்கில் வினையிரண்டுஞ் சாருமல மூன்றுமற முன்பேயாக்கைத்தன் பரிசும் இன்புறு அன்புபிழம்பாய்த்திரிவார் அவர்கருத்தினளவினரோ எனக் கூட்டுக.

'முன்பே' என்றதன் ஏகாரம் தேற்றம். 'யாக்கைத்தன்பரிசும்' என்றஉம்மை ஆன்மாவின்பரிசும் என இறந்தது தழீஇற்று. முத்திறச்சத்திநி பாதமுடையாரானு மெய்தப்பெறாது தீவிரதரபக்குவமுடையவரானெய்தப்படும் யாக்கைத்தன்பரிசும் என உயர்வு சிறப்புமாம், முன்பு என்றவிடத்து ஏகாரம் தொக்கது. தன் - அசை. திரிவார் - வினையாலணையும்பெயர். காலவழு-திரிவார், திரிந்தவர் - மாறினவர். 'எல்லாம் பேதித்துக்காணும்நெறி' எனமுற் செய்யுளிற் கிளந்தெடுத்துக்கூறிய அதனையே இச் செய்யுளில் வலியுறுத்தி அநுவதித்தார் என்பதும் நோக்குக. பேதித்தல் - மனமொழி மெய்திரிதல். ஓகாரம் எதிர்மறை, யாக்கப்படுதலின் யாக்கை எனப்பட்டது. இருவினைப்பாசத்தால் மும்மலங்களும் யாக்கப்பட்டதனைய உடல் என்றபடி யாக்கை கட்டுகை. அதனையுடைய உடலைக் குறித்தலிற்றொழிலாகுபெயர். 'யாக்கைநாடியயர்வதுபோலவும்' என்றார் சிந்தாமணியினும். அவர்-இழித்தற்கண்வந்தசுட்டுப்பெயர். இருவினைப்பாசமறவே மலபந்தமு மொருங்கு நீங்கி மலபரிபாகமெய்தப் பெறுவதாகலின் இருவினையுஞ் சாருமலமூன்றுமெனவும்,



ஆணவமலமுளதாக கன்மமும் அஃதுள்வழிமாயையும் ஒன்றையொன்று சார்ந்து நிற்றலிற் சாருமல மூன்றுமெனவும், எம்திண்ணனார் சகலர்க்குரியமும் மலங்களும் ஒரு சேரநீங்கப் பெற்றனர் என்பது தோன்ற 'மலமூன்றும்' அற என்றுங்கூறினார். 'சாரும் மலம்' - அநாதியே ஆன்மாவைச் சார்ந்துள்ளமலம் எனினுமாம். சாருமலம் - காலவழு.

அரிவையர்மாட்டுள்ள அன்பும் பிறவும் துன்புறுதற்கேதுவாய அன்பாகலின், அதுபோலாது பரபோகமாகிய பேரின்ப வநுபவத்திற்காய அன்பென்பார் 'இன்புறுஅன்பு' எனவும், அத்தகைய அன்பேவடிவாகிய சிவமாந்தன்மையை யடைந்தார் என்பார் 'இன்புறு அன்புபிழம் பாய்த்திரிவார்' எனவுங்கூறினார். இன்புறு அன்பு எனவே துன்புறு அன்புமுளதென்பதும் சொல்லாற்றலாற் பெற்றாம். 'அள்ளூறுாக்கை' என ஆளுடைய வடிகள் திருவாய் மலர்ந்தருளிய தும் இது. இருவினையுமறுதல் - இருவினையொப்படைதல். புண்ணிய பாவமிரண்டினும் அவற்றின் பயன்களாய இன்ப துன்ப மிரண்டினும் முறையே விருப்பும் வெறுப்பும் நிகழ்தலின்றி அவ் விரண்டினு மொப்ப உவர்ப்பு நிகழ்ந்து விடுவோனதறிவின்கண் அவ் விருவினையும் அவ்வாறொப்ப நிகழ்தலே இருவினை யொப்பாம்.

மும்மலமுமறுதல் - மலபரிபாகமடைதல்.

ஆணவமலமானது ஆன்மசிற்சத்தியை மறைக்கவியலாது தன் சத்திதேய்தற்குரிய துணைக்காரணங்களெல்லாவற்றோடுங் கூடுதலே மலபரிபாகமாம். மலசத்தி மடங்கிய வழிக்கான்மிய மலமும், கான்மியமலமொழிந்த விடத்து மாயாமலமும் நீங்குவனவாம்.

இரச குளிகையின் பரிசத்தால் இரும்பு வன்மையுங் கருமையுமற்று மென்மையும் பொன்மையும் பெற்றாற்போல, திருக்காளத்தியப்பர் திருநோக்கால் இருவினையும் மும்மலமுமற்று இருவினையொப்பும் அதிதீவிர சத்திநிபாதமுமெய்தி யாக்கையும் இன்புறு மன்புவடிவாய் மாறினார் எம் திண்ணனார் என்க. எனவே சகசநிட்டை கைவரப்பெற்றார் என்பது பெற்றாம். இத்தன்மையாதலை கருஎ-ம் செய்யுளிற் காண்க.

திருத்தொண்டர் புராணத்துக் காணப்படுவதாகிய இச்செய்யுட்கும், இதுபோன்ற வேறுபல செய்யுட்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகளது உரைக்கும், ஸ்ரீமத் சுப்பிராய நாயகரவர்களது உரைக்கும், எமது உரைக்கும் கருத்துவகையாற் சிறிது மாறுபடுதல் காணப்படுதலின், கல்வியறிவிற் சிறந்த சான்றோருள்ளக் கருத்தையறிவான் இதனை வெளியிடலாயினேன்.

உ

# திரிபுரதகனம்.

[ஸ்ரீ உ. வே. T. V. ஸ்ரீநிவாஸாசார்ய ரவர்கள் மொழிபெயர்த்த **கர்ணபர்வம்** (சென்னை கமர்ஷியல்பிரஸ். 1923 ம் வருடப்பதிப்பு) 24, 25, 26, 27 வது அத்தியாயங்களின் திரட்டு.]

*தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி என்ற தாரகாசுரனுடையகுமாரர்கள் தவத்தை மேற்கொண்டு சரீரங்களை வாட்டினார்கள். அவர்கள் நான்முகரிடத்தி னின்று (தங்களுக்கு) மரணமில்லாமையை வேண்டினார்கள். அவர்கள் சதுர்முகரைவணங்கி 'நாசம்செய்யப்படாத மூன்றுபட்டணங்களை எங்களுக்கு நீர் கொடுக்கக் கடவீர்; ஒன்று சேர்ந்த இந்த மூன்றுபட்டணங்களையும் அப்பொழுது பெருமைபொருந்திய தேவஸ்ரேஷ்டனை எவன் ஒரேபாணத்தினால் நாசம்செய்வானோ அவனே எங்களுக்கு ம்ருத்யுவாகுக' என்று வேண்டினார்கள். பிரம்மதேவர் 'இவ்வாறு ஆகுக' என்று சொல்லிவிட்டு ஏகினார். திரிபுரவாசிகளான அசுரர்கள் உலகங்களெல்லாவற்றுக்கும் துன்பஞ்செய்தார்கள். இந்திரன் தேவர்களோடு பிரம்மதேவரை அடைந்தான். அவர்கள், 'பகவானே! அந்த அசுரர்களைக் கொல்லும் உபாயத்தைச் சொல்லவேண்டும்' என்று விஞ்ஞாபனம் செய்தார்கள். பிரம்மதேவர் தேவர்களைப் பார்த்து, 'தேவர்களே! அந்தப்பட்டணங்களை முக்கண்ணரேபிளப்பதற்குத்திறமையுள்ளவர்; நீங்களனைவர்களும், ஜகதீஸ்வரரும்ஜயசீலரும் உத்தமமான காரியங்களைச் செய்கின்றவருமான ஸ்தாணுவை யுத்தம் செய்யும்படி சீக்கிரம் வேண்டுங்கள்; அந்த ஈஸ்வரர் அசுரர்களைச் சம்ஹரிப்பார்' என்றுகூறினார். தேவசிரேஷ்டர்கள் தேவவருஷத்தில் ஆயிரம் வருஷம் தவம் புரிந்து விருஷபத்வஜரிடம் சென்றனர். தேவர்கள் பிரம்மாவை முன்னிட்டுக்கொண்டு சரண்யரான ருத்திரரைச் சர்வவிதத்தினாலும் சரணமடைந்தார்கள். சங்கரர் அந்தத் தேவர்களைப்பார்த்து, 'மங்களமுண்டாகுக' என்று ஆசீர்வதித்துச் 'சொல்லுங்கள்; சொல்லுங்கள்' என்று வினவினார். அந்தத்தேவர்கள் ஈஸ்வரரைப்பார்த்து, 'பிரபுவே! தேவரீருக்கு வந்தனம்; வந்தனம்; வந்தனம்; மனவாக்குக் காயங்களால் உம்மைச் சரணமடைந்திருக்கிற எங்களைத்தேவரீர் பாதுகாக்கவேண்டும்' என்று வேண்டினார்கள். ருத்திரராலே அபயங்கொடுக்கப்பட்டவுடனே பிரம்மதேவர், சங்கரரைப்பூஜித்து 'சர்வபிராணிகளுக்கும் ஈசுவரரே! அந்த அசுரர்களை உம்மைத்தவிர வேறொருவன் சம்ஹரிப்பதற்குத் தகுந்தவனல்லன்; தேவரே! யுத்தத்தில் அசுரர்களைக்கொல்லும்; தேவரீர் தேவர்களுக்குச் சரண்யர்; உம்மை நாங்கள் சரணமடைந்தோம்' என்று கூறினார். ஈசுவரர் 'நீங்களெல்லோரும் என்னுடைய தேஜஸ்பலம் இவைகளுடைய ஒருபாதியினாலே பகைவர்களை நாசஞ் செய்யுங்கள்' என்றுநியமித்தார். தேவர்கள் 'சுரேஸ்வரரே! தேவரீருடைய தேஜஸின் பாதிப்*



*பாகத்தைத் தரிப்பதற்கு நாங்கள் சக்தியற்றவர்களா யிருக்கிறோம்; தேவரீரே எங்களெல்லாருடைய பலத்தின் அர்த்தாம்சத்தினாலும் பகைவர்களை நாசஞ்செய்யும்; மஹாதேவரே! நீரே எங்களைக்காப்பாற்றும்; நீரே பகைவர்களைக் கொல்லும்' என்று பிரார்த்தித்தார்கள். ஈசுவரர், 'என்னுடைய தேஜஸைத் தரிப்பதற்கு நீங்கள் சக்தியற்றவர்களாயிருப்பீர்களே யாகில், நான் உங்களுடைய தேஜஸிற்பாதியோடு கூடியவனாக இந்தச் சத்துருக்களைக் கொல்வேன்; தேவர்களே! நான் எல்லாப் பிராணிகளுக்கும் மங்களத்தை உண்டுபண்ணுகிறவனா யிருக்கிறேன்; அதனாலேதான், எனக்குச் சிவத்தன்மை; ஆனால், அந்தத் தேவசத்துருக்கள் அதர்மத்துடன் இருக்கின்றார்கள்; உங்களுடைய பகைவர்களைக் கொல்லப்போகிறேன்; எல்லாத்தேவர்களும் தனித்தனியாகப் பலத்தில் பப்பாதி எனக்குக்கொடுங்கள்; துன்பத்தை அடைவிக்கப் பட்டவர்களான எல்லாப்பிராணிகளும் எனக்குப் பசுவாயிருக்கும் தன்மையை ஏற்படுத்திக் கொள்ளட்டும்; தேவர்களே! பசுக்களுக்குப் பதியாயிருக்குந் தன்மையானது இப்பொழுது எனக்கு உண்டாகுக; தேவசிரேஷ்டர்களே! உங்களுக்கு இந்தப்பசுத்தன்மை விஷயத்தில் பயம் வேண்டாம்; பசுத்தன்மைக்கு விமோசனத்தைக் கேளுங்கள்; அதனைச்செய்யவேண்டும், உங்களுள் எவன், பசுபதியான என் விஷயமான விரதத்தை அனுஷ்டிக்கிறானோ அவன் பசுத்தன்மையினின்று விடுபடுவான்; இன்னும் மற்ற எவர்கள் இந்தவிரதத்தை அனுஷ்டிப்பார்களோ அவர்களும் விடுபடுவார்கள்; எவன் கடைசிக்காலம் வரையிலாவது பன்னிரண்டு வருஷமாவது அரை வருஷமாவது ஒருமாதமாவது பன்னிரண்டுநாளாவது (அனுஷ்டிப்பானோ) அவன் பசுத்தன்மையினின்று விடுபடுவான்; ஆதலால், சிறந்ததும் ரகசியமானதும் திவ்யமுமான இந்த விரதத்தை நீங்க ளனுஷ்டிப்பீர்களாக' என்றுகூறினார். தேவர்கள் 'அவ்வாறே ஆகட்டும்' என்றுசொல்லிவிட்டு எங்களுடைய தேஜஸைச் சேர்ந்த இந்த அர்த்தாம்சத்தையும் தேவரீர் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பம் செய்தார்கள். சங்கரர் எல்லாத் தேவர்களுடைய தேஜஸினுடைய பாதியையும் பெற்றுக்கொண்டு தேஜஸினாலே அதிகரித்தவராகி மீண்டும் அதிக பலசாலியானார். அப்பொழுது, பசுஸ்வரூபிகளான எல்லாப் பிராணிகளுக்கும் பதியுமானார். தேவர்களனைவர்களும் புராரியான ருத்திருக்கு அபிஷேகம் செய்வித்தார்கள். விஸ்வகர்மாவும் ஆலோசித்துத் திவ்வியமான ஒருரதத்தை உண்டுபண்ணினான். விஸ்வகர்மா திவ்ய ரதத்தை ஏற்படுத்தி ஸ்ரீஹரியை பாணமாக அமைத்தான். ஷாட்குண்ய பரிபூர்ணரும், அளவற்ற தேஜஸை யுடையவருமான ஈசுவரருக்கு மஹாவிஷ்ணுவானவர் ஆத்மா (இங்கு ஆத்மாஎன்பது சரீரம் என்னும் பொருட்டு) வாதலால், அந்தருத்ரர் விஷ்ணுமயமான பாணத்தைத் தனுசிலுள்ள நாண்கயிற்*

தில் சேர்ப்பதை சஹித்தார். தேவர்கள் பிதாமஹரை முடியால் வணங்கி (ருத்திருக்கு) சாரத்யம் செய்வதன் பொருட்டு வேண்டினார்கள். பிரம்மா 'இதோ நான் தேவரான ருத்திருக்குக் குதிரைகளைப் பிடித்து நடத்துகிறேன்' என்றார். பிறகு பிரம்மதேவர் தானவர்களுடைய பட்டணங்களைக் குறித்து மனோவேகத்துடனும் வாயுவேகத்துடனும் கூடின குதிரைகளை நடத்தினார். ரதத்தில் பூட்டப்பட்ட அந்த வேதமயமான குதிரைகள் உடனே கிளம்பி; ருத்ரரை அந்தக்ஷணத்திலேயே தைத்யர்களுடைய பட்டணத்தை அடையும்படி செய்தன. ருத்திரர் வில்லில் நாணேற்றி அவ்விதமான பாணத்தைப் பூட்டிப் பாசுபதாஸ்திரத்தோடு சேர்த்துத் திரிபுரத்தை அழிக்கவேண்டுமென்றெண்ணினார். அந்த ருத்திரர் வில்லில் நாணத்தைப்பூட்டிய அந்தச்சமயத்தில் மூன்று பட்டணங்களும் விரைவாக ஒன்றாயிருக்குந் தன்மையை அடைந்தன. அசுரர்களை நாசம் செய்யப்போகின்றவரும், வர்ணிக்கமுடியாததும் சிறந்ததுமான சரீரமுள்ளவரும், சகிக்கமுடியாத தேஜஸுள்ளவருமான மஹாதேவருக்கு எதிரில் திரிபுரமானது தோன்றியது. பிறகு, லோகநாதரும் ஷாட்குண்யபரிபூர்ணருமானபினாகியானவர், நேரில் (ஆகாயத்தில்) நிற்கின்ற மூன்று பட்டணங்களையுங் கண்டு திவ்யமான அந்தவில்லிலுள்ள நாண் கயிற்றையிழுத்து மூவுலகங்களிலும் சாரமான அந்தப்பாணத்தைத் திரிபுரத்தைக் குறித்துப் பிரயோகித்தார். பரமேஸ்வரரும் தேவதேவருமான மஹேஸ்வரர் அசுரர்களுடைய கூட்டத்துடன் கூடின அந்தத் திரிபுரத்தை ஒரே பாணத்தினால் நாசஞ்செய்தார். பாணத்தினுடைய தேஜஸினாலுண்டான தீயினால் எரிக்கப்பட்டு ஆயிரம் துண்டாகச் சிதறிய அந்தப்பட்டணமானது அதிகமாகத் தீனஸ்வரத்தைவெளியிட்டுக் கொண்டு மிச்சமில்லாமல் அழிந்து விட்டது. அந்தத் திரிபுரமானது மேற்கு சமுத்திரத்தில் விழுந்துவிட்டது. தம்முடைய குரோதத்தினின்று உண்டான நெருப்பு மூவுலகங்களையுங் கொளுத்துவதற்கு ஆரம்பித்தது. அந்தநெருப்பை முக்கண்ணர், 'நீ உலகங்களைச்சாம்பலாகச் செய்யாதே' என்று கட்டளையிட்டார். பிறகு, தேவர்களும் ரிஷிகளும் தம் நிலைமையை யடைந்தார்கள். அவர்கள் ஸ்தாணுவை ஸ்தோத்திரஞ் செய்தார்கள்.

குறிப்பு:—சிவபுராண வரலாற்றுக்கும் இதற்கும் சிற்சில பேதங்களுள்ளன.

திருச்சிற்றம்பலம்.

கருநட்ட கண்டனை யண்டத் தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதி லெய்ய வல்லானைச் செந்நீ முழங்கத்
திருநட்ட மாடியைத் தில்லைக் கிறையைச் சிற்றம்பலத்துப்
பெருநட்ட மாடியை வானவர் கோனென்று வாழ்த்துவனே.

திருச்சிற்றம்பலம். (—திருநாவுக்கரசர்.)

---

௨

# அடியார் பூசையே அரன்பூசை.

(காஞ்சீபுரம், திரு. அ. முத்தையப்பிள்ளை யவர்கள்.)

திருநீறு அக்கமாதிய சிவசின்னங்களணிந்து சிவபெருமானை உள்ளன்போடும் பூசித்துச் சதா திருவைந்தெழுத்தை யோதுபவரே மெய்யடியாராவர். மெய்யடியார் பால் சிவபெருமான் சதாசாநித்திய முற்றிருப்பர். 'நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே, புக்குநிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்' 'காதிலே திருவேடங் கையிலே ஜெபமாலை, கழுத்தின் மார்பின் மீதிலே தாழ்வடங்கள் மனதிலே கரவடமாம்' வேட முடையார்பால் விளங்கான். 'அன்பே சிவம்' என்றபடி அன்புததும்பிய மனத்தினிடத்தே சிவம் விளங்கும். அடியார்களது சரீரமே ஆண்டவனதாலயம். 'உள்ளம் சிவலிங்கம் ஊனுடம்பு ஆலயம்' என்றார் திருமூலரும்.

"தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னு ளிருத்தலாற்—றன்னுணரு
நேசத்தர் தம்பால் நிகழுந் ததிநெய்போல்
பாசத்தார்க் கின்றாம் பதி."

சிந்திப்பதற்கரிய பரம்பொருளே தன்னை உலகத்துள்ள ஆன்மாக்கள் அறியும்பொருட்டு, திருநீறு கண்டிகை திகழும் திருவேடமாகிய தனது திருவடிவை அன்பர்க் களித்தலானும், அவ்வன்பர் சிவோகம் பாவனையால் தம்மை அறியச்செய்தலானும், அவ்விதம் ஒரு குறியின் கண் நின்று உணரும் அம்மெய்யன்பரைத் தனது வியாபகத்துள் இருக்க இருத்துதலானும், குறியும் இரந்து நின்று தன்னை யுள்ளவாறு உணரும் அவ்வன்பரிடத்துத் தயிரில் நெய்போல விளங்கித் தோன்றியும், மேற்கூறிய தகுதியில்லாத பாசக்கட்டுடையோராகிய ஆன்மாக்களிடத்து பாலினிடத்தே மறைந்து கிடக்கும் நெய்போல விளக்கமாகத் தோன்றாமலும் நிற்கும். புகலி வேந்தரும் தமது பொன்மொழிகளில்,

"பனைக்கை மும்மத வேழமு ரித்தவன்
நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனை
தினைத்தனைப் பொழுதும் மறந் துய்வனோ"

என அனைத்தும் வேடமாய பரனை நினைப்பவர் மனக்கோயிலாக் கொண்டவன் என்றார். இதனால் தினைத்தனைப் பொழுதும் மறவாதார் மனத்தே சிவபெருமான் திருக்கோயில் கொள்வர் என்பதும் 'ஓராதா ருள்ளத்தொளிக்கு மொளியானே' என்னும் வாதவூரர் திருவாசகப்படி நினையாதார் மனத்தே விறகிற்றீ போல் மறைந்துநிற்பன் என்பதும் பெற்றாம். உலகிற் பெரியது கூறியநம் உயர் மூதாட்டியார்,

"பெரிது பெரிது புவனம்பெரிது
புவனமோ நான் முகன் படைப்பு
நான்முகனோ கரியமா லுந்தியில் வந்தோன்
கரியமாலோ அலைகடற் றுயின்றோன்

அலைகடலோ குறுமுனி அங்கையி லடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறு மண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர்தம் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டர்தம் உள்ளத் தொடுக்கம்
தொண்டர் தம்பெருமை சொல்லவும் பெரிதே''

எனமொழிந்துள்ளனர். ஆண்டவனே அடியார்களது மனத்தில் அமைபவர் எனின் அவ்வடியார்களது பெருமையை அளவிட்டுரைத்தல் சாலுமோ!

அடியார்களோடிருந்து அவர்பணி யியற்றி வழிபடுதலே சிவனருளை எளிதில் பெறமார்க்கமாம். திருவாசகங்கூறிய மணிவாசகனார்,

"உடையா னுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியேன் நடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே"

"பொற்சபையிலாடும் முடிவிலா முதல்வ! நம்மையுடையவளாகிய சிவசத்தி உன்னிடத்தே உள்ளீடாக இருக்கின்றாள். நீயும் அச்சத்தியினிடையே கலந்திருக்கின்றாய். நீவிரிருவருமெனக்குள்ளீடாய் இருப்பது மெய்யாயின், நீ எனக்கு முற்பட்டு நின்று என் விருப்பம் நிறைவேறுமாறு, அடியேன் உன் அடியார் நடுவிலே இருத்தற்குரிய திருவருள் செய்தல்வேண்டும்" என வேண்டுகின்றனர். அடியார் நடுவுளிருப்பதால் இறையன்பு நிலை பெற்றோங்கி உலகப்பற்றின்றி விரைவில் வீடுசேர்தல் கூடுமாதலின், 'என்கருத்து முடியும்வண்ணம் அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்' என்றனர்.

தம்பிரான் றோழராம் நம்பியாரூரர், ஓர்நாள் தியாகேசப் பெருமான் ஆலயத்திற்குச் செல்லுகையில், தேவாசிரிய மண்டபத்திற் குழுமியுள்ள அடியார்களை நோக்கி, 'யான் இன்னோர்க் கடிமையாம் நாள் எந்நாளோ?' எனக்கருதிக்கொண்டே ஆலயத்துள் நுழைந்தார். இதனையறிந்த பெருமான் தன்றோழரது விருப்பம் முடியவும், அடியார்களது பெருமை யுலகில் விளங்கவும் திருவுளங்கொண்டு, ஆரூரர்முன் எழுந்தருளி அடியார்களது வழித்தொண்டை அவருக்கு உரைத்து 'அன்பனே! நம் மடியார்கள் மீது பதிகம் பாடுவாயாக!" எனக்கட்டளையிட்டு 'தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என அடியெடுத்துக் கொடுத்தருளினர். பின்பு சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாசிரிய மண்டபத்தில் வந்துநின்று கரங்குவித்து அடியார்களுக்கு வணக்கஞ்செய்து ஒவ்வொருவர்க்கும் தனித்தனி அடியனாகக் கூறி திருத்தொண்டத் தொகைபாடினார்.

"துரும்பனே னென்னினுங் கைவிடுதல் நீதியோ
தொண்டரொடு கூட்டு கண்டாய்"

எனத் தொண்டர் கூட்டுறவு விழைகின்றார்; தாயுமான சுவாமிகள். இவ்வாறே ஏனைய பெரியார்களும் அடியார்களோடிணங்கி யிருந்தே இன்புற்றிருக்கின்றனர்.



"..................பிறைசேர் சென்னி
ஐயனதருளைப் பெற்றார்க் கதிசய மிதென்கொல் மூன்று
வையமுந் தொழிலுஞ் செய்ய வல்லவ ரவரேயன்றோ"

என்பபோல் அவனருள் பெற்ற மெய்யடியார்கட்கு இவ்வவனியில் ஆகாத காரியமும் உண்டோ? இல்லை; இல்லை; முத்தொழிலுஞ் செய்யவல்லவ ரென்பதற்குச் சிறிது மையமில்லை. இதனை, கல்லைத் தெப்பமாக்கியும், அராவிடமகற்றியும், (திதி) ஆண் பனையைப் பெண் பனையாக்கியும், என்பைப் பெண்ணாக்கியும், முதலையுண்ட மதலையை வருவித்தும் (சிருட்டி), புத்தனார் தலையைத்தத்தச்செய்தும், (சங்காரம்) மூகை வாய்திறந்து மொழியச்செய்தும் உள்ள சமயாசாரியர்களது சரிதையானும், ஒட்டப்பம் வீசி வீட்டையும், கவிகூறினஅளவே கழுமரத்தையும் எரித்த பட்டினத்தடிகள் சரிதையானும் உணரக்கிடக்கின்றது.

ஆண்டவன் அடியார்க் கெளியனா யிருந்து அவர்பணி யியற்றுந் தன்மையன். அடியார் வருத்தமகற்றுவான் வேண்டி, மதுரைமாநகரிற் குதிரை மாறியும், விண்புகழ் முடிமுசை மண்பொறை சுமந்தும், நீற்றெழின் மேனியில் மாற்றடிபட்டும், கச்சூர் வீதியிற் பிச்சையேற்றளித்தும், பொதிசோறேந்தி நடைவழிப் போந்தும் இன்னும் பல்லாற்றானும் பணியியற்றியுள்ளனர்.

இனி, மெய்யடியார்களது இருதய கமலத்திலே இறை விளங்குதலானும், அவர்கள் எண்ணிய வெண்ணியவாறே இயற்றுதலானும் அவ்வடியார்களைப்பூசித்து, அவர் பணியியற்றி, வேண்டுவன உதவின் அதுவே சிவபெருமானுக்கு ப்ரீதியாம்.

"படமாடக் கோயிற் பகவர்க்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவர்க்க தாமே" (திருமந்திரம்)

த்வஜபடாம் ஆடுஞ் சிகரிகளையுடைய திருக்கோயில்களுக்குச் சென்று மந்திர நியாசத்தாற் சிவசாந்நித்திய முண்டாக்கப்பெற்ற சிவமூர்த்தங்களுக்குத்தினந்தோறும் அபிடேகாலங்கார ஆராதன நைவேத்யஞ் செய்தலாதிய உபசாரங்கள் அடியார்களுக் குரித்தாக மாட்டாது. நடமாடுங் கோயில்களாகிய (அடியார்பால் அரனுறைதலின் அடியார்களை நடமாடுங் கோயில்கள் என்றார்) அடியார்களைஉள்ளன்போடும் உபசரித்து உண்பிக்கச் செய்யின் அஃது ஆண்டவனுக்கு ப்ரீதியாம். ஆதலின், சிவபூசையினும் அடியார் பூசையே சிறந்ததாகக் கொண்டுள்ளோர் பிறவிவேலையிற் பேதுறாது தொண்டர்களாகிய கலங்கரைச் சுடர்வழிச்சென்று சிவபதமாந் திருக்கரையைச் சீக்கிரம் அடைவர். இந்நிலையிலிருந்து முத்தியெய்தியவ ரெண்ணிறந்தோர். இதனை திருத்தொண்டர் புராணக் காதையுட் சிறக்கக் காணலாம்.

சிவனடியார்களுக்கு அன்னமளித் துபசரித்தலே சிறந்த பணியெனக் கொண்டு காதலிருவர் கருத்தொருமித்து இல்லறம் நடத்தியவரும் 'செங்காட் டங்குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய, வெங்காட்டுஅனலேந்தி விளையாடும் பெருமானே' என ஆளுடையபிள்ளையார் அருண்மொழியால் விதந்தோதப்பட்டவரும்ஆகிய 'சிறுத்தொண்டர்' சரிதையைவிளக்குவாம்.

# சிறுத்தொண்டர் சரிதை.

சோறுடைத் தென்னுஞ் சோழநாட்டிலே திருச்செங்காட்டங் குடியிலே மாமாத்தியர் குலத்திலே 'பரஞ்சோதியார்' என்னுந் திருநாமம்படைத்த பெரியார் ஒருவரிருந்தார், அவர் சோழமன்னனது அமைச்சராயிருந்து, கடனாற்றி, போர்த்தொழில் வல்லாராயிருந்து, வாதாவி நகரத்தில் மூண்டபோரில் ஜெயங்கொண்டு, திரண்ட நிதிகளும் யானை குதிரை முதலிய திரள்களும் திரட்டிவந்தனர். அரசன், இவரது வெற்றிக்குக்காரணம் அவரது சிவபக்தியே என வேனைய அமைச்சர்களாற் செவியுற்று, அந்நிதிக்குவையல்களையும், சர்வமானியங்களையும் கொடுத்து 'அடியவரே, என்பிழைபொறுத்து இனி இப்பணி விலக்கி, திருத்தொண்டு செய்துகொண்டிரும்.' எனவேண்டினர். பரஞ்சோதியாரும் விடைபெற்றுத் தமதில்லஞ் சென்று தமது இல்லக்கிழத்தியாராம் திருவெண்காட்டு நங்கையாருடன் கலந்து நல்லறம் ஓம்பி, சிவனடியார்களுக்கு அமுதளித்தலே சிவபூசையிலுஞ் சிறந்ததெனச் சிந்தித்து அவ்வழி யொழுகி வந்தனர். அடியார்களுண்ட பின்னரே உணவருந்தல் வேண்டும் என உறுதிபூண்டனர். பரஞ்சோதியார் அடியார்களுக்கு மிகச்சிறியராய் நடந்துவந்தனராதலின் அவர்க்குச் 'சிறுத்தொண்டர்' என்னுங் காரணப்பெயர் வழங்கலாயிற்று.

இங்ஙன நிகழுநாளில் அவர்க்கு ஓர்புதல்வர் பிறந்தார். சிறுத்தொண்டர் அப்பிள்ளைக்குச் 'சீராளதேவர்' என்னும் பெயர் புனைவித்து வளர்த்து உரியபருவத்தில் பள்ளிக்கனுப்பினர். அத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் எழுந்தருளினர். அவர் வரவறிந்து சிறுத்தொண்டர் எதிரேற்று உபசரித்தனர். சம்பந்தர் சிறுத்தொண்டரைத் தமது பதிகத்தில் சிறப்பித்துப்பாடி மீண்டனர்.

சிறுத்தொண்டரது அன்பும் அடியார்பணியும் நாளுக்குநாள் கொழுந்துவிட்டு வளரத் தொடங்கியது. "இவர் திருத்தொண் டிருங்கயிலை அத்தர் திருவடியிணைக் கீழ்ச்சென்றணைய" சிவபெருமான் தொண்டரின் மெய்யன்பு நுகர்தற்கு வயிரவகோலத்துடன் எழுந்தருளினர். பசியால் மெலிந்தவர்போல் சிறுத்தொண்டர் மனைப்புறத்தே நின்று 'சிறுத்தொண்டர் வீட்டில் உளரோ?' என விசாரித்தார். தாதியாராகிய சந்தனநங்கையார், விரைந்து பணிந்து 'நாயனார் அடியார்களைத் தேடி அயற்புறத்தே சென்றுள்ளார்; சுவாமிகள் உள்ளே எழுந்தருளலாம்' என, 'ஆடவரில்லாமனையில் இரேன்' என மறுத்தார் வயிரவர். அதுகேட்ட வெண்காட்டு நங்கையார், ஓடிவந்து பணிந்து 'ஸ்வாமி! நாயனார் தினந்தோறும் அடியார்களுக்கமுதளித்தே உண்பதுவழக்கம்; இன்றொருவரும் வராமையின் தேடி அழைத்து வரச் சென்றிருக்கின்றார்; இப்பொழுதே வந்துவிடுவார்; அடிகள் உள்ளே எழுந்தருள்க' எனப்பிரார்த்தித்தார். வயிரவர் மறுத்து 'நாம் கணபதீச்சரத்தில், திருஆத்தியின்கீழிருப்போம்; சிறுத்தொண்டர்வந்தால் தெரிவியுங்கள்' எனக்கூறிப் போயினர்.

அடியார்களைத் தேடிக் காணாதலைந்து திரும்பிய சிறுத்தொண்டர் வீடுசேர்ந்ததும் நிகழ்ந்தன வறிந்து, ஆலயஞ்சென்று அடிகளை அன்போடும் வணங்கி உபசரித்து அமுதுண்ண அழைத்தார். வயிரவர் 'நாம்வடதேசம் உம்மைக்காணவந்தோம். எமக்குணவளித்தல் உம்மால் இயலாது' என்றார். நாயனார் 'தாங்கள் அவ்வாறுமறுக்காது தங்கள் உணவுமுறையைத் தெரிவிப்பின், அதன்படி சித்தம் செய்து இடுகின்றேன்' என்றார். வயிரவர், 'அன்பரே! நாம் ஆறுமாதத்தொருமுறை உணவருந்துவோம்; அந்நாளை



இந்நாள்; இன்று பசுவைக்கொன் றருந்துவது வழக்கம்; அப்பசு, நரபசு; அன்றியும் அது ஐந்து வயதுடையதாய் பழுதில்லா வுறுப்பினதாய் இருத்தல்வேண்டும்; அச்சிறுவன் ஒருகுடிக்கொருவனாய் அவனைத் தாய் உவந்து பிடிக்கத்தாதை யுவந்து அரிதல்வேண்டும்; இவ்வாறாயின் உண்போம்' என்றார். நாயனார் 'இஃதும்எனக்கோர் அருமையன்று; அடிகள் திருவமுதுசெய்ய இசைதலே போதும்' என்றனர். என்னே! இவ்வன்பின் திறத்தையாரால் அளவிட்டுரைத்தல் கூடும். இதுவரை அடியார்கள் எவரும் ஊன்உணவு கேட்டிலர். இப்பொழுது போந்த அடியார் ஊன் கேட்கின்றார். அதுவும் நரமாமிசம். மறுப்பின் அவரது அன்னதான நியதிகுன்றும். அடியார்களிடம் அவர்கொண்ட அன்பு மறுக்குந் தகையதன்று. தம் உடல் பொருள் ஆவி மூன்றும் சிவனடியார்களுக்குச் சொந்தமாக்கியவர். ஆதலின், அவர் அடியார்கள் விரும்பியதைச் செய்வதிலேயே அன்பு முனைந்து நின்ற இஃதன்றோ தலையன்பு?

அளவிலாமகிழ்ச்சியுடன் நாயனார் வீடுசென்று நடந்தவை நவின்று, நிறைந்தபொருள் கொடுத்தால் பிள்ளையைக் கொடுப்பாருளராயினும், அதனைத்தாய் தந்தையர் சம்மதித்து அரிவார்களோ? மாட்டார்களாதலின் 'எனையிங்குய்ய நீபயந்தான் றன்னை அழைப்போம்' என்று வெண்காட்டு நங்கையாரிடம் விளம்பினர். அவ்வம்மையாரும் எவ்விதமாவது அடியார் புசித்தாற்போதும் என்ற அன்பு மேலீட்டினால் அக்கருத்துக் கிசைந்து, 'நம்மைக்காக்க வருமணியை, பள்ளியிற் சென்று கொண்டுவாரும்' எனக் கூறினார். ஈண்டு திருவெண்காட்டு நங்கையாரது அடியார் பக்தியும் பதிவிரதத் தன்மையும் பாராட்டற்பாலது.

நாயனார் விரைந்து பள்ளியிற்சென்று பிள்ளையை யழைத்து வந்து நீராட்டி ஈரம்புலர்த்தி, வயிரவர் கூறிய வண்ணமிருந்து 'செயற்கருஞ் செய்கை' செய்து முடித்தனர். அன்பென்னும் மதுமாந்திய இத்தம்பதிகள் தம்மை மறந்து இச்செய்கை செய்வாராயினர். கட்குடியன் மயக்கத்தால் தன்னைமறந்து கொடுஞ்செயல்களைச் செய்யத்துணிகின்றான். இஃது கட்குடியைப்போலாது மேலும்மேலும் களிப்பைத் தரும்அன்புக்குடிவெறி.

பின்னர் திருவெண்காட்டு நங்கையார் தலைக்கறி திருவமுதுக் காகாதென சந்தனநங்கையாரிடம் கொடுத்து மற்றைய உறுப்புக்களைச் செவ்விதிற் சமைத்து தங்கணவர்க் குரைத்தார். நாயனார் விரைந்து சென்று வயிரவரை வணங்கி அமுதுண்ண வெழுந்தருளுமாறு பிரார்த்தித்தார். வயிரவர் எழுந்தருளுதலும் நாயனார் இருநிதியம் பெற்ற வறியவன் போல பேருவகையுடன் அழைத்துச்சென்றார். நாயனாரும், அம்மையாரும் விதிப்படி வழிபாடியற்றி வயிரவர் சொற்படி சோற்றுடன் கறிகளையும் ஒக்கப்படைத்தனர். வயிரவர் அதனைத் திருக்கண்சாய்த்து 'பசுவின் எல்லாவுறுப்புக்களையுஞ் சமைத்தீரா? என்றார். 'தலையிறைச்சியாகாதெனக் கழித்தோம்' எனமறுமொழி வழங்கினர். வயிரவர் 'அதுவும் வேண்டும்' என்றார். இருவரும் திகைப்புற்றனர். அந்நிலையில் தாதியாராகிய சந்தனநங்கையார் 'ஓர்கால் அடிகளுக்குத் தலைக்கறியின்மீது விருப்பம் உண்டாகவும் கூடும் என எண்ணி அடியாள் அதையும் சமைத்துள்ளேன்.' எனக்கொணர்ந்து கொடுத்தார். நங்கையார் அதையும் படைத்தனர். அன்புவலையிற் பட்ட இத்தம்பதிகளுக்கு அமைந்த தோழியின் அடியார் பக்தியை என்னென்றுரைப்பது! நாயனார்க்கு மனையாளுந் தாதியும் ஒத்து அடியவர்கள்பால் அன்புசெ

லுத்திவருதல் வியக்கத்தக்கதே. இவ்வமயம் தாதியா இத்தலைக்கறியைச் சமைக்காதிருந்திருப்பின் வயிரவர் கோபத்திற்கு ஆளாதல் கூடுமல்லவா?

பின், வயிரவர் 'நாம் சிவனடியார்களோடன்றி தனித் துண்பதில்லை; அடியார்களை அழையும் என்றார். அந்தோ! நாயனார் என்செய்வார்; ஓடினார் அடியார்களைத்தேடினார்; எவருங்கிடைத்திலர். திரும்பி வயிரவரிடம் வந்து அடியேன் திருநீறணிந்தார்க்கே உணவளிப்பது வழக்கம் அத்தகையோர் ஒருவரையுங்காணேன்; இஃது இறைவரது சோதனையாகும் என்றார். வயிரவர் 'தொண்டரே! நீரும் திருநீறிட்டவரேயாதலின் எம்முடனிருந்து உணவருந்தும்.' என்றார். வயிரவர் சொற்படி அவர்க்குப் படைத்துள்ள உணவுகளைப் பகிர்ந்து சிறுத்தொண்டர்க்கும் படைத்தனர். தொண்டர், நாம் உண்டால் வயிரவரும் உண்பார் எனக்கருதி முன் உண்ணப்புகுந்தார். வயிரவர் தடுத்து, ஆறுதிங்கட் கொருமுறை உண்ணும் யாம் உண்ணும் வரை தினந்தோறும் உண்ணும் நீர் பொறுக்கலாதா? என்றுரைத்து 'நம் முடனருந்த, புத்திரனிருந்தால் அழையும் என்றார். 'அவன் இங்கு இப்பொழுது உதவான்' என்றார்கள். 'அவனைத்தேடி அழையும் அவன் வந்தாலன்றி யாம் உண்ணோம்' என வயிரவர் வாய்மலர்ந்தனர்.

தம்பிள்ளையை அறுத்துச் சமைத்ததையும் அன்புக்குடிவெறியால் மறந்துவெளிப்போந்து மகவைக்கூவி யழைப்பாராயினர். இதனால் இவர்கள் தம்பிள்ளையைச் செய்த செய்கைமுழுதும் வயிரவர்பால் கொண்ட அன்புக் கடலில் மூழ்கி தம்மைமறந்து செய்தனர் என்பது வெள்ளிடை. சிவபெருமான் திருவருளால் சீராளர் பள்ளியினின்று ஓடி வருபவர் போல ஓடிவந்தனர். இருவரும் பிள்ளையை அணைத்து மகிழ்ந்து 'வயிரவர் அமுதுண்ணப்பெற்றோம்' என்னுங் களிப்பால் இல் புகுந்தனர். வியிரவரையும் அவர்க்குப்படைத்த உணவுகளையும் கண்டாரிலர். என்னே! மாயம்! என மயங்கிக் கீழே விழுந்தார்; எழுந்தார்; வயிரவர் எங்குற்றாரெனத் தேட வெளிவந்தார்.

'இனியுந்தாழ்க்கில் என்னாகுமோ நாயனார்கதி' எனச் சிவபெருமான் மழவிடைமீது உமாதேவியாருடனும் குமாரக்கடவுளுடனும் காட்சியளித்தனர். நாயனார், நங்கையார், மைந்தர், தாதியார் ஆகிய நால்வரும் கிடைத்தற்கரிய காட்சியைக் கண்ணாரக்கண்டு துதித்து ஆடிப்பாடி மகிழ்ந்தனர். அடியார்பூசையின் பலனை ஒருங்கே அனுபவித்தனர். பெருமான், இந்நால்வர்க்கும் தங்களைப்பிரியாப் பேரின்ப வாழ்வளித்து உடனழைத்துச் சென்றனர்.

இவர் போன்று அடியார்பூசைசெய்து பேறுபெற்றோரது சரித்திரமே 'பெரியபுராணம்' என்பதாம், இப் பெயரினாலேயே தொண்டர்கள் பெருமை தோன்றக்கிடக்கின்றது.

"சிவனடியார்க் கன்பிலாச் சிந்தையே இரும்பு
ஏவல் செய்ய நாளும்
அவனடியார் திறத்தொழுகா ஆக்கையே மரம்
செவிகண் ணாதி யைந்தும்
பவனடியாரி டைச்செலுத்தாப் படிவமே பாவை
மறை பாவுஞ் சைவ
தவநெறியல் லாநெறியே பவநெறி........
......................"

(திருவிளையாடல்.)

உ

# திருக்கார்த்திகை தீபம்.

இம்மதி ரு-ந்தேதியா? கூ-ந்தேதியா? என்னும் வினா? இதற்கு முந்திய "சிவநேசன்" செய்தித்திரட்டில் வந்திருப்பதைப் பற்றி, கொத்தமங்கலம் சிவஸ்ரீ சு. ஏகாம்பரேச்சுவர சிவாசாரியரவர்கள் தெரிவிப்பதன் சாரம்.

திருச்சிற்றம்பலம்.

"வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்றொல் கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்"

திருச்சிற்றம்பலம்.

என, திருஞானசம்பந்தப் பெருமானருளிய திருமயிலை, தேவாரத் திருவாக்கானும் "சோணசைலமாலை"யாதிய நூல்களில் கார்த்திகை விளக்கு என்றே கூறியிருப்பதன்றி, பௌர்ணமியைப் புணர்த்திக் கூறாமையானும், பேரளவிலும் நக்ஷத்திரமே பிரதானமா யிருத்தலானும், 'பருவம் சேர்ந்தாலும் சேராவிடினும் கார்த்திகை நட்சத்திரத்தை, பிரதானமாகக்கொண்டு, தீபபூஜை செய்க' என, குமாரதந்திரம் கார்த்திகைமாச பூஜாவிதியும், 'கார்த்திகை மாதத்தியகார்த்திகைநட்சத்திரத்தில், தீபபூஜைசெய்க' என சுப்பிரபேதாகமம்கிருத்திகா தீபவிதிப்படலமும். வாதுளாகமம், கிருத்திகாதீபோத்ஸவவிதிப்படலமும், "கார்த்திகைமாதத்தில், திருவண்ணாமலையில், தேவியார் உத்ஸவம் நடாத்தி, கார்த்திகை நட்சத்திரத்தன்று சாயுங்காலத்தில் சிவபெருமானைப் பூஜித்து பிரம விட்டுணுக்களாலும் காணமுடியாத சோதிவடிவங்கண்டு ஸ்தோத்திரம் செய்தனள்" எனஉபமன்யுபக்த விலாசம்மத்தியபாகம் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் சரித்திரம் கஅ-வது அத்தியாயமும், கூறுவதாலும், கூஉ சாயுங்காலத்தில் கார்த்திகை நட்சத்திரம் இருப்பதாலும் கூஉ-யே திருவண்ணாமலை முதலாம் சிவாலயங்களி லெல்லாம், திருக்கார்த்திகை தீபம் எனக்கொள்ள வேண்டும்.

பௌர்ணமியை, பிரதானமாக 'காரணாகமம்' கூறினும் சாயுங்காலத்தில் கார்த்திகை நட்சத்திர மிருந்தால் தான் கொள்ளலாம். சர்வாலயங்களிலும், இம்மதிருஉ பரணி தீபமும் கூஉ கார்த்திகை தீபமுமாம்.

"ஆர்த்தெழு திரைகள் சுருண்டெறிகட னஞ்சமுது
செய்பெரும் புகழ்த்தனிமை
தீர்த்திட வுளங்கொண் டவலனேன் றனைநின்
திருவடிக்கன்ப னாக்கிலையே
கார்த்திகை விளக்குமணி முடிசுமந்து கண்டவ
ரகத்திரு ளனைத்தும்
சாய்த்து நின்றெழுந்து விளங்குறுஞ் சோண
சைலனே கைலைநாயகனே"

உ

# சீவகாருண்யம்.

(மேலைச்சிவபுரி பாலபண்டித, திரு. குழந்தைவேல்சாமி எழுதியதன்சாரம்.)

சீவகாருண்யம்:—என்பது எல்லாவுயிர்களிடத்தும் அருளுடைமையாகும். மக்களிடத்து மாத்திரம் இரக்கம்காட்டி ஏனைய பிராணிகளைக் கொன்று ஊனையுண்டல் அருளுடைமையாகாது.

ஆணைப்பெண்ணாக்கவும், அப்பெண்ணை யாணாக்கவும், இறந்தவர்களை யெழுப்பவும், சித்திகைவரப்பெற்ற உருவுடைய புருஷனாலும் கூரியவாளினால் உயிர்களுபாதையுற, இரக்கமின்றி உயிரோடு கூடிய உடம்பைத் துணித்துண்ணுங் கருத்துக் கொள்வானாகில் அவனை ஆன்மார்த்த குருவாணையாக, உயிர்க்குயிராய் விளங்கும் சிவபெருமானாராணையாக ஞானியென்று சொல்லலாகாது என்பதை,

"மருவாணைப் பெண்ணாக்கி ஒருகணத்திற் கண்விழித்து
வயங்கு மப்பெண்
உருவாணை யுருவாக்கி யிறந்தவரை யெழுப்புகின்ற
வுருவ னேனுங்
கருவாணை யுறவிரங்கா துயிருடம்பைக் கடிந்துண்ணுங்
கருத்தனே லெங்
குருவாணை யெமது சிவக் கொழுந்தாணை
ஞானியெனக் கூறொணாதே."

என வடலூர் ஸ்ரீமத் இராமலிங்கசுவாமிக ளருளினமையாற் றெளியலாம்.

கொலைசெய்தலே பாவம், புலாலுண்ணுதல் பாவமாகாதெனக் கூறிப் புலாலருந்துவோரும் பலராவர். விலைகொடுத்துக் கொள்வாரிலரேல், கொலைபுரிந்து விலைபகர்வாருமிலராவர். "தினற்பொருட்டாற் கொள்ளா துலகெனின் யாரும், விலைப்பொருட்டா லூன்றருவாரில்" என்பது தேவர்திருவாக்கு. ஆகலால், கொன்றவன் பாவமும், தின்றவனுக்காம்.

தின்று ருசிகண்ட பழக்கத்தால் புலாலுணவை விரும்பியுண்பதோடமையாது தெய்வத்திற்கும் பிரீதியென்பதாக தேவாலயங்களில் சிறுதெய்வங்கட்கு ஆடு கிடாய் கோழி பன்றிகளைப்பலியிட்டு உயிரைப்போக்கி உடலையும் பாவத்தையும் பூசாரியுடன் பங்கிட்டுண்பது பெரும்பாதகமும் முழுமூடத்தன்மையுமாகும். இம்மட்டோ? சைவ, வைணவ ஆலயங்களில், வாஸ்துசாந்தியிலும், வைரவமூர்த்தி திருச்சந்நிதானத்திலும், தேர்க்காலிலும் ஆடுவெட்டும் மூடர்களுக்கும், அதைத்தடுக்காதிருக்கும் கோயிலதிகாரிகளுக்கும்



நல்லறிவுச்சுடர் கொழுத்துதல் சாமான்யமன்று. அவர்களைத் தண்டித்துத்திருத்தக் கடவுள்தான் கருணைபுரியவேண்டும்.

மருளாடிகள், சாமி, ஆடு கோழியாதிய உயிர்ப்பலி கேட்பதாகச்சொல்வதை உண்மையென்று நம்புதல், அவ்வாறுபலியிடுதல், அறிவுடைமையாகுமா?

பலன் புண்ணியத்தால் வருமா? பாவத்தால் வருமா? உயிர்ப்பலியிடுதல் புண்ணியமா? பாவமா? என்றெல்லாம் பகுத்துணரவேண்டாமா? உயிர்கட்கு இன்னா செய்தலே பாவம்; இனியவை செய்தலே புண்ணியம். 'அஹிம்சா பரமோதருமா' என்றனர் வடநூலார்.

"அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றம் குற்றமே யாம்"

என்றதைக் கூர்த்தமெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்ந்தா லன்றோ எவ்விடத்தும் கொலை தீது, கொலைக்குற்றத்திற்குத் தண்டனை ஏற்படும் என்பதையறிந்து கொலையஞ்சி கொலைப்பாவத்திற்குத் தப்புதல் கூடும்.

"அறவினை யாதெனிற் கொல்லாமை—கோறல்
பிறவினை எல்லாம் தரும்"

"கொல்லான் புலாலை மறுத்தானைக்—கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்"

"ஆனை யடியி லடங்கா வடியில்லை
தானதுவா நிற்கின்ற தன்மைத்தால்—ஊனுயிரைக்
கொல்லா வறத்தின் கொழுநிழற்கீ ழுள்ளடங்கு
மெல்லா வறமு மிசைந்து"

என்பனவாதிய வாப்தவாக்கியங்களை நோக்கின் கொல்லாமையே தலைசிறந்த தருமமென்பது புலனாம்.

"கொல்லாமை மேற்கொண் டொழுகுவான்—வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று"

என்றதனால் எமபயமின்றி இனிது வாழலாம்.

எல்லாவுயிர்களும் இறைவன் சந்நிதி, உயிரோடு பொருந்திய வுடல்களெல்லாம் இறைவனதாலயம் ஆதலால் மன்னுயிர் யாவும் தன்னுயிர்போலக்கருதாது கொன்றருந்தும் சிறுமை யுடையாரை நமன்றமர் பற்றி நலியச்செய்வர் என்பதை,

"எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகு
மிலங்குமுயிருடலனைத்து மீசன் கோயில்

எவ்வுயிரு மெம்முயிர் போலென்று நோக்கி
யிரங்காது கொன்றருந்து மிழிவினோரை
வவ்வியம தூதருந் தண்டஞ் செய்து
வல்லிரும்பை யுருக்கியவர் வாயில்வார்த்து
வெவ்விய தீயெழுநகரகில் வீழ்த்திமாறு
வேதனைசெய் திடுவரென வோதுநாலே."

என்னும் செயுளால் தெளிந்து பாதகங்களுக் கெல்லாம் தலையாய கொலைபுலையாதிய தீமைகளையகற்றி, சீவகாருண்ய சீலத்தை மேற் கொள்ளின், சிவனருளால் இகபரம் இரண்டினும் பெறலரும் பேறும் புகழும் பெருவாழ்வும் பெறலாம்.

"எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
றெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே"
"தம்முயிர்போ லெவ்வுயிருந் தாமென்று தண்ணருள்கூர்
செம்மையருக் கேவலென்று செய்வேன் பராபரமே"
—தாயுமானவர்.

"உயிர்க ளோம்புமி னூண்விழைந் துண்ணன்மின்
செயிர்க ணீங்குமின் செற்றமிகந் தொரீஇக்
கதிக ணல்லுருக் கண்டனர் கைதொழு
மதிகள் போல மறுவிலர் தோன்றுவீர்." —வளையாபதி

---

## பலவான்குடி சிவநேசன் நீடூழிவாழ்க, என வரத்தகும் மூன்றக்ஷரங் கொண்ட நடுவெழுத்தலங்கார

## ஓர் விடுகவி வினா.

### பன்னிரு சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

எருலவு மாகரிநா மத்தினொடு மதிதுடைமா பொதுமா யைப்பே
ரிலகுறுசே வுகங்காஞ்சி யெனும்பதியோ டொருமொரு வெழின்ம ரப்பேர்
காரிலகு கருணைபொழி யிபவதனற் களிக்குமொரு கவின்சிற் றூணும்
காசினியி னரசனொடு மாகநா டற்பெயரார் காசில் வென்றிப்
பேரொடுகோமயமுழிகாலஞ்சோலைப்பேரோடங்காலமொடுபானுப்பேரும்
பிறழாது மூன்றெழுத்துப் பேர்கணீயிர் பிரியமுட னறியவிதன் பெற்றி
[யோர்ந்தே
சீருலவு தனவணிக மணிகளூராக் திவமெனுமோர் மாபலவான் குடித்தே
[சேறுஞ்
'சிவநேசன் நீடூழிவாழ்க!' என்றே தேர்வுடையீர் நீயிரிதைத் தீட்டுவீரே.

திரு, கண. நித்தியானந்தசுவாமிகள்,
மேலமடம், குன்றக்குடி.



(அ - கை.) சிவன்முத்தனுடைய அறிவு அகம்புறமென்னும் பேதமின்றிச் சிவமாய் விளங்குமெனக்கூறுகின்றார்.

13. புறனகங் கீழ்மேல்பக்கம் புணர்வதோர் பொருளுமில்லைத்
திறனுடை யுருவமெல்லாந் தானாகித் தேக மின்றாய்
அறன்முறை யடங்கு ஞான யோகினா லறியப்பட்ட
விறன்மலி ஞானாநந்த மேன்மையாய் விளங்காநிற்கும்.

(இ - ள்.) புறன் அகம் கீழ்மேல் பக்கம்(இல்லை)புணர்வதோர் பொருளும் இல்லை - சீவன் முத்தனுக்குப் புறமென்றும் உள்ளென்றும் கீழென்றும் மேலென்றும் பக்கமென்றும் பேதம்நிகழ்வதில்லை, அவ்விடங்களில் பொருந்தியிருக்கும் பொருள்களின் தோற்றமும் நிகழ்வதில்லை, திறனுடை உருவம் எல்லாம் தானாகி தேகம் இன்றாய் - நிலைபெற்ற பொருள்களனைத்தும் சித்துருபமான தன் சொரூபமேயாய்த் தோன்றிச் சரீரத்தோற்றம் இல்லையாகி, அறன்முறை அடங்கும் ஞானயோகினால் அறியப்பட்டவிறல் மலி ஞான ஆனந்தம் - பசுபாசங்களோடு கூடாது பதியில் அடங்கிநிற்றலால் நிகழும் ஞானயோகத்தால் அறியப்பட்ட வெற்றி மிகுந்த ஞானானந்தமே, மேன்மையாய் விளங்கா நிற்கும் - மேம்பட்டு விளங்கும் எ - று.

(பொ - ரை.) சீவன்முத்தனுக்குப் புறமென்றும் உள்ளென்றும் கீழென்றும் மேலென்றும் பேதம் நிகழ்வதில்லை; அவ்விடங்களில் பொருந்தியிருக்கும் பொருள்களின் தோற்றமும் நிகழ்வதில்லை. நிலைபெற்ற பொருள்களனைத்தும் சித்துருபமான தன் சொரூபமேயாய்த் தோன்றிச் சரீரத் தோற்றம் இல்லையாகி, பசுபாசங்களோடு கூடாது பதியில் அடங்கி நிற்றலால் நிகழும் ஞானயோகத்தால் அறியப்பட்டவெற்றி மிகுந்த ஞானானந்தமே மேம்பட்டு விளங்கும் எ - று.

(க - ரை.) சீவன்முத்தனுக்கு உலகத்தோற்றம் உடற்றோற்ற மொன்றுமின்றிச் சிவம் ஒன்றேதோன்றும் என்பதாம்.

தானாகித் தேகமின்றாய் விளங்காநிற்கும் என முடித்துக்கொள்க.

தேகம் தானாகத்தோன்றுங் காலத்துத்தான் புறம் முதலிய இடபேதங்களும் அவ்விடங்களில் உள்ளபொருள்களுந் தோன்றும். தேகந்தோன்றாது தான் சிவமாய்த் தோன்றுங்காலத்து இடபேதங்களும் பொருட்பேதங்களும் தோன்றாது சிவமொன்றே மேம்பட்டுத் தோன்றுமென்பது இச் செய்யுளாற் பெறப்பட்ட பொருளாகும்.

கருமயோகம் உலகானுபவத்திற்குக் காரணமாய் அடங்காமையின்பாற்படும். ஞானயோகம் சிவானுபவத்திற்குக் காரணமாய் தானென்றொருமுதல் இல்லையென்னும்படி அடங்குதலின் பாற்படும். இக் கருத்துத் தோன்ற அறன்முறை யடங்குஞான யோகம் என்றார். அறன்முறையடங்குதல் - பசுபாசங்களோடு கூடாது பதியில் அடங்குதல். (கூ)

186945

(அ - கை.) ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகுந் தன்மையுடையது. ஆதலின் சிவனைச்சார்ந்து சிவமாய் நிற்றல் முறையெனக் கூறுகின்றார்.

14. எந்த வாருயிர் யாதொர் பொருளினைச்
சிந்தையாற் பற்றிக் காரியஞ் செய்திடின்
அந்த யோனிய தாமென் றறிவினால்
பந்த மில்பொருள் பற்றுத றக்கதே.

(இ - ள்.) எந்த ஆருயிர் - எந்தமக்களுயிரும், யாதொர் பொருளினை சிந்தையால் பற்றி காரியம்செய்திடின் - எந்தப்பொருளையாவது மனதைக் கருவியாகக்கொண்டு சார்ந்து நின்று தொழில் செய்யுமாயின், அந்தயோனியது ஆம் - அந்தப்பொருளின் தன்மையே தன்றன்மையாகக் கொண்டுவிளங்கும், என்று - இவ்வாறு கூறும் உண்மையினை யுணர்ந்து, பந்தம் இல் பொருள் அறிவினால் பற்றுதல் தக்கது - அநாதி முத்தசித்துருவாகிய பரம்பொருளை அறிவினால் அறிந்து அதில் அழுந்துதல் முறையாகும் எ - று.

(பொ - ரை.) எந்தமக்களுயிரும், எந்தப்பொருளையாவது மனதைக் கருவியாகக் கொண்டு சார்ந்து நின்று தொழில் செய்யுமாயின், அந்தப்பொருளின் தன்மையே தன்றன்மையாகக் கொண்டு விளங்கும். இவ்வாறு கூறும் உண்மையினை யுணர்ந்து அநாதிமுத்த சித்துருவாகிய பரம்பொருளை அறிவினாலறிந்து அதிலழுந்துதல் முறையாகும் எ - று.

(க - ரை.) சிவஞானத்தால் சிவனைச் சார்ந்து சிவமாய் நிற்றலே ஆன்மாசெய்யத்தக்கது என்பதாம்.

ஆருயிரென்றதனால் மக்களுயிரென்பது பெறப்பட்டது. எல்லாவுயிர்கட்கும் சார்ந்ததன் வண்ணமாந்தன்மை உண்டெனினும், அவ்வுண்மையினைப் பகுத்துணருந்தன்மை மக்களுயிருக்கன்றி ஏனைய உயிர்கட்குக் கிடையாது. தாவரம் முதலிய ஐவகைப் பிறவிகளை அடைந்திருக்கும் உயிர்கட்குப் பகுத்துணர்வு கிடையா தென்பதுபொருந்தும். தேவர்களுக்கும் இல்லையென்றல் பொருந்துமோவெனில், கூறுதும். தேவர்கட்கு இன்பாநுபவமொன்றே யன்றி வேறுவகையான அறிவு நிகழ்கிறதில்லை. ஏகதேசத்தில் அந்தச் சுவர்க்கஇன்பமும் துன்பமெனத் தோன்றினும், அவ்வுலகத்திலிருந்துகொண்டே அதனைக் கடத்தற்கான செயலைச் செய்யமுடியாது. ஆதலினாற்றான் சிவனை இம்மண்ணுலகில் வந்து தேவர்கள் பூசித்தன ரென்று புராணங்கள் கூறுகின்றன. இக்கருத்தினை வலியுறுத் தும் சிவஞானசித்தித் திருவிருத்தம் வருமாறு:—

மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயம்
ஆனிடத் தைந் துமாடு மரன்பணிக் காகவன்றோ



வானிடத் தவருமண்மேல் வந்தரன் றனையர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலுமூம ரொன்றையு முணராரந்தோ. என்பது.

உயிர்க்குச் சார்ந்ததன் வண்ணமாதல் உண்டென்னின், பரிணமிக்குந் தன்மை யுண்டெனப்படும். படவே, சடப்பொருளெனப்பட்டுக் குற்றமாம். கடம் முதலியனவாய்ப் பரிணமிக்குந் தன்மை மண்முதலிய சடப்பொருள்களுக்கிருத்தல் காணப்படுகின்றது. உயிரோ சித்துப் பொருள். அதற்குப் பரிணமங் கூறுதல் பொருந்தாது. ஆதலின், சார்ந்ததன் வண்ணமாதல் உயிருக்குண்டென்றல் எவ்வாறு பொருந்துமெனின், கூறுதும். பரிணமமென்பது ஒருபொருள் பிறிதொரு பொருளாக மாறுதல். பால் தயிராதல் போலும். மண் கடமாதலும், நூல் ஆடையாதலும் இவைபோல்வன பிறவும் பரிணமமே. உயிர், சார்ந்தபொருளாக மாறிவிடுகிறதில்லை. சார்ந்த பொருளின் றன்மை உயிரின் அறிவில் விளங்கித் தோன்ற உயிர் அத்தன்மையுடையதாகத்தோன்றலே சார்ந்ததன் வண்ணமாதல். பளிங்குபோலும். அக்கினியாதானும் ஒன்றைப்பற்றி நிற்றலேயன்றித் தனித்துநில்லாத வாறுபோல உயிர்யாதானுமொன்றைப்பற்றி நிற்குமேயன்றித்தனித்துநிற்றலில்லை. ஆகையால் மலத்தைப்பற்றி நிற்குங்காலத்து மலத்தின் றன்மையாகிய அறியாமை-உடையதாய் விளங்கும். கலைமுதலிய கருவிகளைப் பற்றிநிற்குங்காலத்து அவற்றின் றன்மையாகிய ஏகதேச அறிவுடையதாய் விளங்கும். ஏகதேசஅறிவு - ஒன்றனையறியும்பொழுது பிறிதொன்றனை அறியாமை. மலத்தினையுங் கருவிகளையும் நீங்கிச் சிவனைப்பற்றிநிற்குங் காலத்துச் சிவத்தின் றன்மையாகிய முற்றறிவுத் தன்மையுடையதாய் விளங்கும். இவ்வளவேயன்றிச் சார்ந்தபொருளாக உயிர்மாறிவிடுகிறதில்லை. உயிரினறிவு மாறுகின்றமையால் உயிர் மாறுகின்றதென்று சொன்னுதல் கூடாதோ எனின், கூடாது; உயிரினறிவுக்குச் சார்ந்த தன்றன்மை யாதலே யியல்பாதலின் மாறின தென்றல் பொருந்தாமையின். பளிங்கினொளிக்குப் பற்றப்படும் பொருளின்றன்மையாய் விளங்குதல் இயல்பாதல் போலும். அவ்வாறாயினும், பற்றப்படும் பொருளின்றன்மையாய் விளங்குதல் உண்மையாகாதெனப் பட்டுச் சிவனைப்பற்றிச் சிவத்தின்றன்மை தன்னிடத்து விளங்கச் சிவமாய் நிற்றல் உண்மையாகாதேயெனின், அறியாது வினாயினை. எவ்வாறெனில், கூறுதும். எக்காலத்தும் பிரிக்கமுடியாதிருப்பது உண்மை. ஒருகாலத்தில் பிரிக்கப்படுவது உபசாரம். நீரினிடத்துத் தட்பம் உண்மை. வெப்பம் உபசாரம். உயிருக்கு மலமும் கருவிகளும் பிரிக்கப்படுவன. சிவம் பெத்த முத்தியிரண்டினும் பிரிக்கப்படாதது. மலமறைப்பால் அதுவிளங்கித் தோன்றுதலில்லை. மலம் நீங்கியபின்விளங்கித் தோன்றும். விளங்கித்தோன்றியபின் அதுவிட்டு நீங்குதலில்லை. மலம் சடசாதியாகிய வேற்றுச் சாதியாகையால் நீங்கும். சிவம் தன் சாதியாகிய சித்துச் சாதியாகை

யால் நீங்குதலில்லை. நீங்காமையால் சிவத்தைச் சார்ந்து சிவமாய்நிற்றல் உண்மையெனப் படுமன்றி உபசார மாகாதென்க. ஆயினும், பளிங்கிற் றோன்றிய மலரின் நிறம் மணத்தைச் செய்யாத வாறுபோல உயிரிற்றோன்றிய சிவத்தின்றன்மை பஞ்சகிருத்தியஞ் செய்யுமாறில்லை. ஏனையவெல்லாம் சருவஞானோத்தர விருத்தியுட் கூறினுமாதலின் ஆண்டுக்காண்க. (கச)

(அ - கை.) சிவனைச் சார்ந்துநிற்கும் சீவன்முத்தனுக்குக் கன்மபலன் முதலியன இல்லையெனக்கூறுகின்றார்.

15. கன்மபலமேது மில்லைச் சுபாவமே காணுங்கால்
தொன்மையுல குயிரில்லைத் தோன்றுவதெல் லாமசத்து
நன்மையினைத் தோற்றுவித்துப் பற்றிலதாய் நணுகரிய
தென்னவறிந் தானுலகு மிலதாகிச் சுத்தனுமாம்.

(இ - ள்.) சுபாவமே காணுங்கால் - உயிரின் உண்மைத் தன்மையை அறியுமிடத்து, கன்மபலம் ஏதும் இல்லை - (அவனுக்கு) பிராரத்த வினையின் பயனாக அநுபவிக்கத்தக்கது ஒன்றுமில்லை, தொன்மைஉலகு உயிர் இல்லை - (அஃதில்லாமையால்) பழைமையான உலகத்தோற்றமும் நானென்னுந் தற்போதமும்இல்லை, தோன்றுவது எல்லாம் அசத்து - வாசனை பற்றித் தோன்றுமாயின் தோன்றுகின்ற பொருள்களனைத்தும் நிலைபெறின்றிநீங்கும், நன்மையினைத் தோற்றுவித்து - (நீங்கவே) சிவத்தினைத் தோற்றுவித்து, பற்று இலதாய் - சுயம் பிரகாசமாய், நணுகஅரியது என்ன அறிந்தான் - பொருந்துதற்கு அரியது என்னும்படி (தன்னையறியவரும்) அவ்வாறு (தன்னை) அறிந்தவன், உலகும் இலதாகி சுத்தனும் ஆம் - பாசப் பற்றும்நீங்க நிர்மலனுமாவன் எ - று.

(போ - ரை.) உயிரின் உண்மைத் தன்மையை அறியுமிடத்து, அவனுக்குப் பிராரத்த வினையின்பயனாக அநுபவிக்கத் தக்கது ஒன்றுமில்லை. அஃதில்லாமையால் பழைமையான உலகத் தோற்றமும் நானென்னுந் தற்போதமும்இல்லை. வாசனைபற்றி உலகமும் உடலுந் தோன்றுமாயின், தோன்றுகின்ற பொருள்களனைத்தும் நிலைபெறின்றிநீங்கும். நீங்கவே, சிவத்தினைத் தோற்றுவித்துச் சுயம்பிரகாசமாய்ப் பொருந்துதற்கு அரியது என்னும்படி தன்னையறியவரும். அவ்வாறு தன்னை அறிந்தவன், பாசப்பற்றும் நீங்க நிர்மலனும் ஆவன் எ - று.

(க - ரை.) உயிரின் உண்மைத் தன்மையை அறிந்த சீவன்முத்தன், சிவத்தோற்றம் ஒன்றேகண்டு யான் எனது என்னும் பற்றின்றிச் சிவன் போலநிர்மலனாய் விளங்குவன் என்பதாம்.

ஒவ்வொரு பொருளுக்கும் தடத்தநிலை சொரூபநிலையென இருநிலைகளுண்டு. பிறபொருளோடுகூடிநிற்கும் நிலைதடத்தம். தனித்துநிற்கும்நிலை



சொரூபம். மலத்தோடுங் கருவிகளோடுங் கூடிநிற்கும் நிலைஉயிருக்குத்தடத்தம். அவற்றோடுகூடாது தனித்திருக்கும்நிலை உயிருக்குச் சொரூபம். உயிர் யாதானும் ஒன்றைச் சார்ந்து நிற்குமன்றித் தனித்து நிற்றல் எக்காலத்துமில்லையாகையால், மலத்தொடுங் கருவிகளொடுங்கூடாது தனித்தநிலை யென்பது சிவனொடுகூடி நிற்றலேயாகும். அதாவது, சிவனொடுபிரிப்பின்றிநிற்றல் விளங்கித்தோன்ற சிவமாய் நிற்றலாகும். ஆகவே, நான் யார் என்று தன்உண்மையை உள்முகமாகத் திரும்பிநோக்குவானுக்கு நானென ஒருபொருள் தனித்துத் தோன்றுமாறின்றிச் சிவமே மேம்பட்டுத் தோன்றும். அப்பொழுது சார்ந்ததன் வண்ணமாந்தன்மையினை உடைய உயிரினிடத்துச் சிவத்தின்றன்மையாகிய முற்றறிவுமுதலிய குணங்கள் விளங்கித் தோன்றும். தோன்றவே, உயிர்அநுபவிக்க வேண்டியதாய் நியமிக்கப்பட்டுள்ள புண்ணிய பாவப் பயன்கள்வந்து தாக்குதலில்லை. * 'முன்னுடம்பின்வினை யிந்தவுடல் விளைக்கும்.' என்னும் திருவாக்கால் வினைப் பயனை உடம்போடுகூடி உயிர்அநுபவிக்கவேண்டு மென்பது பெறப்படுமாயினும் தன் உண்மையைநோக்கும் உயிர்க்கு உடம்புதோன்று மாறில்லையாகையால், உடம்பால் அநுபவிக்கப்படுவதொன்றும் உயிரைவந்து தாக்குதலில்லை. எனவே, நியதி மாறுபடுதலின்றி உடம்பைத் தாக்கி உடனூழாய்க் கழியுமென அறிந்துகொள்க. இவ்வுண்மை, திருநாவுக்கரசு சுவாமிகளுக்குத் தீயஅமணர்செய்த கொடுமையனைத்தும் உயிரைத் தாக்காது உடனூழாய்க்கழிந்தமையின் வைத்தறியப்படும். இக்கருத்துத்தோன்ற 'கன்மபலம் ஏதுமில்லை' எனப்பட்டது.

கன்மபலனை யநுபவித்தற்கு உடம்பும் வேண்டும்; உலகப்பொருள்களும் வேண்டும். உடம்பிருந்து உலகப்பொருளில்லாத விடத்தும், உலகப்பொருளிருந்து உடம்பில்லாத விடத்தும் கன்மபலனை அநுபவித்தல் கூடாது. ஆகையால் கன்மபலனை அநுபவித்தலில்லாத சிவாநுபவநிலையில் உலகமுந்தோன்றாது உடலுந்தோன்றாதென்பது உணர்த்துதற்கு உலகுயிரில்லை என்றார். உயிருக்கு இருத்தலென்பது நான் என்னுந்தற்போதமே. அது, உடல்பற்றி நிகழ்வது ஆதலின் உயிரில்லை யென்றதனால் உடம்பில்லை யென்பது பெறப்பட்டது.

உடலும் உலகுந் தொன்று தொட்டுத் தொடர்ந்து வருகின்றமைபற்றி தொன்மை யென்னும் அடைமொழிசேர்க்கப்பட்டது. சிவாநுபவ நிலையில் நிற்கும் உயிருக்குப் பழமையான வாசனையால் உலகமும் உடலும் சிலசமயந் தோன்றவரினும், சிவாநுபவத்தின் உறைப்பால் அத்தோற்றம் நிலைபெறின்றிக் கெட்டொழியுமென்பது தோன்ற 'நன்மையினைத் தோற்றுவித்து'

* சிவஞான சித்தியார்-உ. ம். சூ-ம். செ. கo.

னென்பதனை, 'தோன்றுவதெல்லாம் அசத்து' என்றதனைத் தொடரவைத்தார். அசத்தென்பது நிலையாமையைக்குறித்தது. அசத்தாக என்னும் பொருள்பட ஆக்கச்சொல்வருவித்துரைக்க.

நன்மையென்பது குணம். அதுயாதானும் ஒருகுணியைப் பற்றிநின்று பிறர்க்குப்பயன்படும். குணியென்பதுபொருள். உயிர்ப்பொருள் உயிரல்லாத பொருள்களிடத்துக்காணப்படும் நன்மைநிலைத்திருப்பதில்லை. அம்மட்டோ தீமைகலவாது தனித்திருப்பதுமில்லை. இவ்வாறிருத்தற்குக்காரணம் உயிர்ப்பொருள்மலத்தோடு கூடியிருத்தலும் உயிரல்லாதபொருள் சடமாயிருத்தலுமேயாம். ஆகவே, இயல்பாகவே மலத்தொடுகூடாதசிவம் ஒன்றுதான் தீமைகலவாதநன்மையினை எக்காலத்தும்உடையது. இக்கருத்துப்பற்றியே, 'நன்றுடையானைத் தீயதில்லானை' என்றருளிச்செய்தனர் திருஞானசம்பந்தசுவாமிகளும். நன்மையென்பது அதனையுடைய சிவத்தைக் குறித்தது. 'சோதியேசுடரே' என்பதுபோல. (திருவாசகம்.)

பற்றிலது என்பது பிறிதொன்றின் துணைவேண்டாது தானே பிரகாசித்தலைக்குறித்தது. சிவத்தைப்பற்றிநிற்கும்உயிர், சிவம்போலப் பிரகாசிக்குமென்பதுகருத்து.

நணுகரிய என்றவிடத்து நணுக அரியஎன்னும் பொருள்பட அகரந்தொக்குநின்றது.

அறிந்தான் என்னும் அநுவாதத்தால் அறியவருமென்பது பெறப்பட்டது.

உலகு என்பது உலகப்பற்றைக்குறித்தது. உலகம் நீங்கினும் உலகப்பற்று நீங்கவில்லையாயின் நீங்கிய உலகம் மீளவுந் தோற்றக் கூடுமாகையால் சுத்தனாதலில்லை. இக்கருத்தினை, † "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" என்னுந் திருவாக்கானுந் தெளிக. உலகும் என்றவிடத்து உம்மை இழிவு சிறப்பு. சுத்தனும் என்றவிடத்து உம்மை உயர்வு சிறப்பு. (கரு)

(அ - கை.) சீவன் முத்தன் அத்துவாக்களின் உள்ளும் புறம்பும் ஒழிவறவிளங்குவனெனக் கூறுகின்றார்.

16. நிருபாதி பரசிவத்தால் நிகழ்சடாத் துவாக்கள்
வருமாறு தோற்றுவித்த மாயையிரண் டருவாகி
ஒருவாம லறுவகையி னுட்புறம்பு முறல்போலப்
பெருஞான சீவன்முத்தர் பிறங்குவர் தீங்கறுத்தே.

(இ - ள்.) நிருபாதி பரசிவத்தால் - உபாதியில்லாத சிவபரம் பொருளால், நிகழ் சடாத்துவாக்கள் வருமாறு தோற்றுவித்த மாயையிரண்டு -

† திருக்குறள் துறவு. செ. கூ



விளங்குகின்ற ஆறு அத்துவாக்களும் தோன்றுமாறு தோற்றுவித்த சுத்தமாயை அசுத்த மாயை யிரண்டும், அருவாகி - அரூபமாகி, அறுவகையின் உள்புறம்பும் ஒருவாமல் உறல்போல - அந்த ஆறத்துவாக்களின் உள்ளும் புறம்பும் நீங்காது பொருந்திவிளங்கு மாறுபோல, பெருஞான சீவன்முத்தர் - பேரறிவுடைய சீவன்முத்தர், தீங்கறுத்து பிறங்குவர் - (அவ்வத்துவாக்களின் உள்ளும் புறம்பும்) தடையின்றி விளங்குவர் எ - று.

(பொ - ரை.) உபாதியில்லாத சிவபரம் பொருளால் விளங்குகின்ற ஆறு அத்துவாக்களும் தோன்றுமாறு தோற்றுவித்த சுத்தமாயை அசுத்த மாயை யிரண்டும், அரூபமாகி அந்தஆறத்துவாக்களின் உள்ளும் புறம்பும் நீங்காது பொருந்தி விளங்குமாறுபோல, பேரறிவுடைய சீவன்முத்தர் அத்துவாக்களின் உள்ளும் புறம்பும் தடையின்றி விளங்குவர் எ - று.

(க - ரை.) சீவன்முத்தர், உலகப்பொருள்கள் அனைத்தினிடத்தும் உள்ளும் புறம்பும் தடையின்றி விளங்குவர் என்பதாம்.

மாயையிரண்டு என்றவிடத்து முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. ஈற்றிலுள்ள ஏகாரம்அசை. பரசிவந்தான் என்று பாடங்கொள்ளின், தான் என்பதை அசையாக்கி, அத்துச்சாரியையும் ஆலுருபும் தொக்கனவாகக் கொள்க.

உபாதியென்பது பிறிதொன்றன் சேர்க்கை. பரசிவம்ஒன்றினுந்தோய்வின்றிச் சுயம்பிரகாசமாய் நிற்பது ஆதலின் நிருபாதி பரசிவம் எனப்பட்டது.

மாயைசடப்பொருளாதலின் தானேதன் காரியத்தைத் தோற்றுவிக்காது. மண், கடம்முதலியவற்றைத் தானே தோற்றுவிக்காத வாறுபோலும். கடம்முதலியவற்றை மண்ணினின்றுங் குலாலன் தோற்றுவிக்குமாறுபோல, அத்துவாக்கள் ஆறனையும் மாயையினின்று சிவன் தோற்றுவிப்பன். இக்கருத்துப்பற்றியே, †"தந்திடும் சிவனவன்றன் சந்நிதி தன்னினின்றே." என்றருளிச் செய்தனர் அருணந்திசிவாசாரியார்.

அத்துவாக்கள் ஆறு:—மந்திரம், பதம், வன்னம், தத்துவம், புவனம், கலையென்பன. வன்னமென்பது அக்கரம். கலையென்பது நிவிருத்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதையென்பன. இந்த ஆறுஅத்துவாக்களும் சுத்தமாயாகாரியங்களாகும். இவற்றுள், தத்துவம் புவனம் என்னும் இரண்டும் அசுத்தமாயாகாரியங்களாகவுந் தோன்றும். அசுத்தமாயாபுவனவாசிகளுக்கும் ஏனையநான்கும் சுத்தமாயாகாரியங்களே. அத்துவா என்பதன் பொருள், வழி. இவைவழியாமாறும் பிறவும் சிவஞானசித்தியார் எட்டாஞ்சூத்திரத்தில் விரித்துக் கூறினுமாதலின் அவ்விடத்துக்காண்க.

† சிவஞானசித்தியார் க-ம். சூ-ம். செ. கக.

மண், கடத்தைத் தோற்றுவித்து அக்கடத்தின் உள்ளும் புறம்பும் விளங்குமாறுபோல, மாயையுந் தன்காரியத்தைத் தோற்றுவித்து அதன் உள்ளும் புறம்பும் விளங்கும். விளங்கினும் மண்போல மாயை உருவப் பொருளன்மையின் கண்ணால் காணப்படுதலில்லை. கண்ணால் காணப்படாதது கொண்டு மாயையென்ப தொன்றில்லையென்றல் கூடாது. கண்ணால்காணப்படாத கடவுளும் உயிரும் உண்டென்பதுபோல மாயையும் உண்டென்பது துணிபு.

உருவப்பொருளாயுள்ள மண், உருவப்பொருளாயுள்ள கடம்முதலியனவாய்த் தோன்றுதல் பொருத்தமுடைத்து. அருவப்பொருளாயுள்ள மாயை உருவப்பொருளாயுள்ள அத்துவாக்களாய்த்தோன்றுதல் கூடுமென்பது எவ்வாறு பொருந்துமெனின், மரம்முதலியன உருவமாய்த் தோன்றுதற்கு முன் அருவமாயிருந்து பின் உருவமாய்த் தோன்றுமாறு போல, அருவமாகியமாயையிலிருந்து அத்துவாக்களுந் தோன்றுமாதலின்பொருந்துமென்க.

உருவமாய்விளங்கும் வித்துத்தானே மரமாய்த் தோன்றுகின்றதெனின், அன்று. வித்தினிடத்து அடங்கியிருக்கும் அருவமாகிய மரசத்தியே உருவமாய்த் தோன்றுகின்றது. அந்தச் சத்திக்குவித்து பற்றுக்கோடாயிருப்பது. இவ்வாறே மாயைக்குச் சிவம் பற்றுக்கோடாயிருக்கும். மாயை அருவமென்பதும் அதினின்று உருவந்தோன்றுமென்பதும், * "அருவினி லுருவந்தோன்றி" என்னுந் திருவாக்கானும் பெறப்படும்.

அத்துவாக்களுள், புவனம் தூலவுருவம். தத்துவம் சூக்குமவுருவம். கலைமுதலிய ஏனைய நான்கும் அதிசூக்கும உருவம்.

சீவன்முத்தன் எனப்படும் ஆன்மா, அருவாகிய ஞானரூபமாதலின், எல்லாப் பொருள்களினிடத்தும் உள்ளும் புறம்பும் விளங்குமென்பதுணர்த்துதற்கு மாயை உவமையாகக் கூறப்பட்டது. (கசு)

(அ - கை.) காணப்படும் பொருள்களனைத்தையும் ஞானவெளியாகக் காணவேண்டுமெனக் கூறுகின்றார்.

17. வானம் போல வடிவில தாயெங்கும்
ஆனதாகத் தியானம்பண் ணுதவன்
கானந்தன்னி லுலண்டெனக் கட்டுப்பட்
டீனமான பிறப்பிறப் பெய்துமே.

(இ - ள்.) எங்கும் - எவ்விடத்துள்ள எத்திறப் பொருள்களும், வானம்போல வடிவுஇலதாய் ஆனதாக தியானம் பண்ணுதவன் - ஆகாயம் போல உருவமில்லாததா யானதாகச் சிந்தனைசெய்யாதவன், கானந்தன்னில் உலண்டுஎன கட்டுபட்டு - காட்டிலுள்ள உலண்டுப் பூச்சியைப்போலப் (பாசத்தால்) கட்டுப்பட்டு, ஈனமானபிறப்பு இறப்பு எய்தும் - இழிவான பிறப்புஇறப்புக்களைப் பொருந்துவன் எ - று.

* சிவஞான சித்தியார். க-ம். சூ-ம். செ. உஎ.

உ

# காணாடுகாத்தான் சா. ராம. அரு.

## குடும்பத்தினரின், பாகவழக்கு.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் ஜாதி வழக்கம் கோர்ட்டாரால் அங்கீகரிக்கப் பெற்றது.

தேவகோட்டை பிரின்சிபல் சப்கோர்ட்டு 1930-ம் ஸ்ரீ O, S. 33.

வாதி, சா. ராம. அரு. சாத்தப்ப செட்டியாரின் ஸ்வீகார மகன் சுப்பய்யா செட்டியார்.

1-ம் பிரதிவாதி, சா. ராம. அரு. இராமசாமி செட்டியாரின் மகன் இராமநாதன் செட்டியார்.

2-ம் பிரதிவாதி, சா. ராம. அரு. இராமசாமி செட்டியாரின் மனைவியார், வள்ளியம்மை யாச்சி.

3-ம் பிரதிவாதி, சா. ராம. அரு, வீரப்ப செட்டியாரின் மனைவியார், முத்தாயி ஆச்சி.

### வழக்கின் சுருக்கம்.

வாதி, தான் முதல் பிரதிவாதியின் பெரிய தகப்பனார் சாத்தப்ப செட்டியாருக்கு ஸ்வீகாரகுமாரன்; ஷை சா. ராம. அரு. குடும்பச் சொத்துக்களில் பாதியும், தன்னுடைய ஸ்வீகார தாயார் இலக்குமியாச்சியின், சீதனப்பணம் நான்குநூறாயிரரூபா வரை எஸ்டேட்டிலிருக்கிறது; அதுவும் தனக்குக் கிடைக்க வேண்டுமென்றார். பிரதிவாதி, ஷை ஸ்வீகாரம் நடக்கவேஇல்லை; நடந்திருந்தாலும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல; சீதனப்பணம் எஸ்டேட்டில் வரவில்லையென்பதாதியபல ஆக்ஷேபனைகள் செய்தார். வழக்குவிசாரணை சென்ற ஜூலை மாதம் தொடங்கி இடைவிடாமல் நான்கு மாதங்கள் நடந்தது. நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் வழக்கப்படி விதந்துவுக்கு ஸ்வீகாரம் மிகவும்அவசியம்; ஒரு குடும்பத்தில் உடன்பங்காளி மைனராக இருந்தால் பிரிவினையான அடுத்தபங்காளியைக் கேட்டு ஸ்வீகாரம் செய்துகொள்வது செட்டியார்களின் பரம்பரையான வழக்கம். என, ஒன்பது கோவில் நகரத்தார்களில் அநேகபிரமுகர்கள், வாதிதரப்பில் சாட்சிகளாக விசாரிக்கப்பெற்றனர்.

விசாரித்த சாட்சிகள்:-வாதிபக்கத்தில் 97 ம் 3-ம் பிரதிவாதிபக்கத்தில் 16 ம் 1-ம் பிரதிவாதிபக்கத்தில் 38 ம் ஆக 151. ஆதாரவுகள் பல. வழக்கை நடாத்திய வழக்கறிஞர்கள், 20 பேர்.

### தீர்ப்பின்சாரம்.

கனம் நீதிபதி கிருஷ்ணமாச்சாரியாரவர்கள் 700 பக்கங்கள் வரை தீர்ப்புஎழுதி 1934 நவம்பர் 14உ தீர்ப்பை வெளியிட்டனர்.

வாதி சொல்லும் ஜாதிவழக்கத்தை, கௌரவமுள்ளவர்களும், செட்டியார்களின் வெவ்வேறு கோயில்களைச் சேர்ந்தவர்களுமான அநேகம் பிரமுகர்கள் நன்கு ருசுச்செய்தனர்; சட்டப்படியும் வாதியின்ஸ்வீகாரம் செல்லத்தக்கதே; ஸ்வீகாரம் நடக்கவில்லையென்று 1, 2-ம் பிரதிவாதிகள்சொல்வது நம்பத்தக்கதில்லை; சா. ராம. அரு. எஸ்டேட் கணக்குகளெல்லாம் 1-ம் பிரதிவாதி தன்வசத்தில் இல்லையென்று சொல்வது நம்பத்தக்கதில்லை; சீதனப்பணங்களையும்தனது பற்றுவழிகளையும்மறைப்பதற்காகவே இவ்வாறு

சொல்லுகிறார்; வாதியின்தாயார் இலக்குமியாச்சியின்சீதனப்பணமும், வீரப்பசெட்டியாரின் மனைவியார் முத்தாயி ஆச்சியின் சீதனப்பணமும், எஸ்டேட்டில்வரவிருக்கிறது; பிராதில்கண்டிருக்கும் செல்லத்தூர் ஜமீன்முதலான எல்லாச்சொத்துக்களும் பொதுக்குடும்பத்தை சேர்ந்தவைகள்; இலக்மியாச்சியின் சீதனப்பணம் வட்டியுடன் வாதிக்குச்சேரவும், முத்தாயிஆச்சியின்சீதனப்பணம் வட்டியுடன் முத்தாயி ஆச்சிக்குச்சேரவும், மீதமுள்ளவைகள்வாதிக்கும் முதல் பிரதிவாதிக்கும் சமபாகமாகச் சேரவும் வேண்டியது.

வீரப்பசெட்டியாரின் மனைவியார்முத்தாயிஆச்சி, ஸ்வீகாரம்செய்துகொள்ளவேண்டுமென்று கேள்ப்பது நியாயம்; ஸ்வீகாரம் செய்துகொள்ள வீரப்பசெட்டியாரே அனுமதி கொடுத்திருக்கிறார்; ஸ்வீகாரம்செய்து வைப்பதாக, 1-ம் பிரதிவாதியின் தகப்பனார், எழுதிக் கொடுத்திருக்கும் முரி உண்மையானதே; டை ஆச்சிக்கு ஜீவனாம்சத்துக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 200 வீதமும் வீட்டு வசதி, மின்சார விளக்குவசதி, விசைவண்டி வசதிகளும் கொடுக்கவேண்டியது.

இவ்வழக்கில் வாதியினுடைய செலவையும் 3-ம் பிரதிவாதியின் செலவையும் 1-ம் பிரதிவாதி கொடுக்கவேண்டியது. எனக்கூறி யிருப்பதுடன் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் ஜாதிவழக்கங்கள் பலவற்றையும் விவரமாகக்கண்டு யெழுதியுள்ளார்கள்.

### வாதி பக்கத்து வழக்கறிஞர்கள்.

1. மகா-ள-ள-ஸ்ரீ சர். அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், அட்வகேட்ஜெனரல் சென்னை.
2. ,, K. S. இராஜகோபாலய்யங்கார் அட்வகேட், சென்னை.
3. ,, K. உமாமகேஸ்வரய்யர் அட்வகேட், சென்னை.
4. ,, K. சுப்பிரமணிய ஐயர், அட்வகேட், சென்னை.
5. ,, C. சீனிவாசசால் சாஹேப் அட்வகேட், மதுரை.
6. ,, K. R. வேங்கடராமய்யர் அட்வகேட், மதுரை.
7. ,, A. ரெங்கசாமி ஐயங்கார் அட்வகேட், தேவகோட்டை.
8. ,, M. C. முகுந்தராஜய்யங்கார், முதற்றரவக்கீல், தேவகோட்டை
9. ,, V. சீனிவாசய்யங்கார் வக்கீல், தேவகோட்டை.

### 1-ம் பிரதிவாதி பக்கத்து வழக்கறிஞர்கள்.

1. ,, V. V. சீனிவாசய்யங்கார் அட்வகேட், சென்னை.
2. ,, V. K. திருவேங்கடாச்சாரியாரும் கூட்டாளிகளும் அட்வகேட்டுகள், சென்னை.
3. ,, A. லெட்சுமிநாராயணய்யர் அட்வகேட், மதுரை.
4. ,, S. சுப்பிரமணிய ஐயர் அட்வகேட், தேவகோட்டை.
5. ,, M. R. சிவராமஐய்யர் வக்கீல் தேவகோட்டை.

### 2-ம் பிரதிவாதி பக்கத்து வழக்கறிஞர்கள்.

1. ,, R. சொமசுந்தரய்யர், வக்கீல், தேவகோட்டை
2. ,, P. P. இராமபத்திரஐயர், வக்கீல், தேவகோட்டை

### 3-ம் பிரதிவாதி பக்கத்து வழக்கறிஞர்கள்.

1. ராவ்சாஹேப் N. நடேசய்யர், அட்வகேட், மதுரை.
2. ,, C. V. இராமசாமிஐயர், வக்கீல், தேவகோட்டை.

# செய்தித்திரட்டு.

**எறும்புப் புற்றில் காட்டுமனிதர்:**—அமெரிக்காவில் எறும்புப் புற்றுகளில் காட்டுமனிதர் பலர் வசித்து வருகின்றனராம். அப் புற்றுகள் அவ்வளவு வலிமையாகவும், பெரிய குடும்பங்கள் வசிக்கக்கூடியன வாகவும் இருக்கின்றனவாம்.

**மகளிர் நடத்தும் பத்திரிகை:**—ஜப்பானில் மகளிர் நடத்தும் பத்திரிகைகள் நூற்றுக்கு இருபது விகிதம் இருக்கின்றனவாம். விஞ்ஞான சாஸ்திரம், பொருளாதார சாஸ்திரம், சமூக முன்னேற்றம், தேசீய முன்னேற்றம் முதலிய உயரிய நோக்கங்களைக்கொண்டே அப்பத்திரிகைகள் பெரும்பாலும் வெளியாகின்றனவாம். இப்பத்திரிகைகளுக்கு ஏராளமான சந்தாதாரர்கள் இருக்கின்றனராம்,

**வருடத்தில் 1200 விஞ்ஞான நூல்கள்:**—இவ்வருடத்தில்பிரான்ஸ்நாட்டில் 1200 விஞ்ஞான சாஸ்திர சம்பந்தமான நூல்கள் வெளியாகியிருக்கின்றன. இச்சிறந்த வேலைக்குச் சர்க்கார் 7½ கோடி பிராங்கு பொருளுதவியிருக்கின்றனர். இதுபோன்றே ரஷியாவிலும் விஞ்ஞான வளர்ச்சிக்காக இவ்வருடம் 10 லட்சம் ரூபிள்கள் சர்க்கார் வழங்கியிருக்கின்றனர்.

**பெண்களுக்காக தனிக்கோர்ட்டு:**—ஐக்கிய மாகாணத்தில் சிறுபெண்களின் குற்றங்களை விசாரணை செய்வதற்காக ஒரு தனிப்பெஞ்சுக்கோர்ட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குக் கௌரவ மாஜிஸ்ரேட்டுகளாகப் பெண்கள் சிலர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கு இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டின் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**வெள்ளிவிழா ஸ்டாம்புகள்**—நமது அரசர் பெருமானுன ஐந்தாம்ஜார்ஜ் அரச பதவியை ஏற்று வருகிற வருடத்தோடு இருபத்தைந்து வருடங்கள் ஆகப்போகின்றமையால், அச்சமயம் வெள்ளிவிழா கொண்டாடப்படும். அவ்விழாவின் நினைவுக்குறிக் கடையாளமாக இந்திய சர்க்கார் விசேஷத் தபால் தலைகள் வெளியிடப் போகின்றனராம். அத்தபால் தலைகளில் ஒரு மாதாகோயில், அமிருதசான் தங்கக்கோயில், ஆக்ராதாஜ்மஹால், ராமேஸ்வர ஆலயம் ஆகிய படங்கள் பொறிக்கப்படுமாம்.

**சுருக்கெழுத்தில் வல்ல பெண்மணியார்:**—ஸ்ரீமதி எமிலி ஸ்மித்என்பவர், சுருக்கெழுத்து எழுதுவதில் உலகிலேயே புகழ்பெற்றுத் திகழ்கிறார். இவர் நிமிடம் ஒன்றுக்கு 220 வார்த்தைகள் சாதாரணமாக எழுதுகிறார். சிலசமயங்களில் அவர்நிமிஷத்துக்கு 300 வார்த்தைகள்கூடஎழுதுகிறாராம்.

**கன்னிகைகள் சங்கம்:**—சங்தோட்விவாகசபை என்றபெயருடன் பாரிசில் பெண்கள் சங்கமொன்றுளது. இதன் அங்கத்தினர் யாவரும் விவாகமாகாதவர்கள். ஒருகணவனை வரிக்குமுன் அவர், தமது மனைவியிடம் விசுவாசமாயிருப்பாராவென்று இச்சங்கத்தார் சோதிக்க ஒருநூதனமுறையைக் கையாளுவார்கள். அதாவது ஒருபெண் ஒரு புருஷனைக் காதலிக்கிறாள் காதல் உண்மையானதுதானாவென்றுசந்தேகமறச்சோதிப்பதற்காமற்றப்பெண் அங்கத்தினர் மேற்படி புருஷனை விழுந்து விழுந்து காதலிப்பதாகப் பாசாங்கு செய்வார்கள். அவர்களுடைய வலையில் அப்புருஷன் அகப்பட்டு வேறு யாரையாவது காதலிப்பதாகத் தெரிந்தால் உடனே முதற்பெண் கலியாணஉத்தேசத்தை நிறுத்திக்கொண்டு விடுவாள். அப்படிக்கின்றி அப்பெண்ணின் வலையில்சிக்காமல் உறுதியுடன் புருஷன் இருந்தால், முன்பு காதலித்தவளிடம் உண்மையான நட்புப் பாராட்டுவதாகக் கருதப்படும்.

பரிமணங்குடி:—ஷண்முகநாதசுவாமி கோவிலில் ஐப்பசி அஉ கார்த்திகை யன்று திருமஞ்சன திருவாராதனை யாதிய சிறப்புகள் நடைபெற்றன.

பஞ்சாயத்துப் போர்ட்டுத்தலைவர்கள்:—திருவாளர்களான, உ. ராம. மெ. சு. மெ. மாணிக்கவாசகன் செட்டியாரவர்கள் தேவகோட்டை யூனியனுக்கும், க. வெ. சித. வேங்கடாசலம் செட்டியாரவர்கள் காரைக்குடி யூனியனுக்கும், வயி. ராம. வயிரவன் செட்டியாரவர்கள் கண்டனூர் யூனியனுக்கும், எ. மு. முத்தப்ப செட்டியாரவர்கள் புதுவயல் யூனியனுக்கும், பிரான்மலை ராவுத்தரவர்கள் திருப்புத்தூர் யூனியனுக்கும், S. RM. வேங்கடாசலம் சேர்வைகாரர் சிவகெங்கை யூனியனுக்கும் தலைவர்களாகத் தேர்தலுற்றிருக்கின்றார்கள்.

சென்னைமாநகர்:—நகரமேயராக கனம், குமாரராஜா, மு. அ. முத்தையு செட்டியாரவர்கள் இரண்டாவதுமுறை தேர்தலுற்றிருக்கின்றார்கள். பழயமேயர் மிஸ்டர் வேடன் அவர்களால் தங்கச்சரிகை மாலை சூட்டப்பெற்றது. பெருமை பொருந்திய 'மேயர்' குமாரராஜா அவர்கள், ஆபீஸ்நடவடிக்கைகளைத் தமிழில் வெளியிடவும் ஏற்பாடுசெய்வதாய்க் கூறினர். அவர்களின் தாய்மொழிப்பற்று மிகவும் போற்றற்பாலது.

அரிமளம்:—சிவநேசத் திருவாளர், அ. அரு. அண்ணாமலை செட்டியாரவர்கள் தங்களின் கடைக் காரியங்களைப் பார்த்துவர ஐப்பசி மாதத்தில் ரூப்பீனுக்குப் போயிருக்கின்றார்கள். பொருட் பெருக்கத்துடன் சுகமேவர ஆலமநாதர் அருள்பாலிப்பாராக.

கோட்டைச்சேரி:—சித்தாந்த வித்தியாசாலையில் ஐப்பசி உகவ சுவாதிநாள் ஸ்ரீமெய்கண்ட சிவாசாரிய சுவாமிகளின் குருபூஜை சிறப்பாக நடைபெற்றது.

கேதாரவிரதம்:—சௌரமானப்படி புரட்டாதிமாத கிருஷ்ணபக்கசதுர்த்தசியை முடிவாகக் கொண்டு முன்தொடங்கி நடத்தவேண்டுமென்பாரை, புரட்டாதி மாதத்தில் இரண்டு அமாவாசைவரின், அவ்வதி மாதத்தில், கேதாரவிரதம் கோற்க, சிவாகமத்தில் பிரமாண முளதானால், தெரிவிக்கும்படி கொத்தமங்கலம், திரு. வே. நாராயண கனபாடிகள் வேண்டுகின்றனர்.

---

### "சிவநேசன்" ஆண்டுத்தொகை விவரம்.

உள்நாட்டிற்கு ரூ 2—4—0 , அதற்கு மூலதனம் ரூ 30—0—0

அயல்நாட்டிற்கு ரூ 3—0—0 , அதற்கு மூலதனம் ரூ 40—0—0

தனிப்பிரதி அணா 0—3—0

### விளம்பரவிகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4—0—0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8—0—0

---

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர் ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.